بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 8

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

22 ரஜப் 1443 ஹிஜ்ரி கமரி 24 தப்லீக் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி 24 பிப்ரவரி 2022


## அல்லாஹ்வின் கட்டளை

وَلَوۡ تَرٰۤی اِذۡ وُقِفُوۡا عَلَی النَّارِ فَقَالُوۡا یٰلَیۡتَنَا نُرَدُّ وَلَا نُکَذِّبَ بِاٰیٰتِ رَبِّنَا وَنَکُوۡنَ مِنَ الۡمُؤۡمِنِیۡنَ

நரகத்திற்கு முன் அவர்கள் நிறுத்தப்படும்போது நீர் அவர்களைக் கண்டால், அவர்கள் அந்தோ! நாங்கள் மீண்டும் (உலகிற்கு) அனுப்பப்பட்டால் நாங்கள் ஒருபோதும் எங்கள் இறைவனின் அடையாளங்களைப் பொய்யாக்க மாட்டோம். மேலும் நாங்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இருப்போம் என்று கூறுவார்கள். (6:28)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## இந்த காலத்தில் இஸ்லாத்திற்கு வந்துள்ள சோதனைகளை அகற்றுவதற்கு சிறிது பங்களிப்பு வழங்குவது ஒவ்வொரு முஸ்லிமிற்கும் அவசியமாகும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### நிச்சயிக்கப்பட்ட விஷயம்

கூறினார்கள்: தற்போது நமது எதிரிகளில் ஏராளமான நபர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் நமது ஜமாஅத்தில் நுழைவது நிச்சயமாகும். அவர்கள் எதிர்க்கின்றனர். ஆனால் இறுதியில் இந்த மக்களுடனேயே நீங்கள் சேர்ந்து விடுவீர்கள் என்று அவர்களைப் பார்த்து வானவர்கள் சிரிக்கின்றனர். அவர்கள் நம்முடன் ஒரு நாள் இணைய இருக்கின்ற நமது மறைவான கூட்டத்தினர் ஆவார்.

### இக்காலத்தின் பெரும் இறைவணக்கம்

இந்த காலத்தில் இஸ்லாத்திற்கு வந்துள்ள சோதனைகளை அகற்றுவதற்கு சிறிது பங்களிப்பு வழங்குவது ஒவ்வொரு முஸ்லிமிற்கும் அவசியமாகும். இந்த குழப்பங்களை அகற்றுவதில் ஒவ்வொருவரும் பங்கு பெறுவதே இக்காலத்தின் பெரும் இறைவணக்கம் ஆகும். இக்காலத்தில் பரவியுள்ள தீமைகளையும், ஏளனங்களையும் அகற்ற வேண்டும். அவற்றை தமது சொற்பொழிவு, ஞானம் மற்றும் தமக்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு ஆற்றல்களுடனும் தூய முயற்சிகளுடனும் ஒவ்வொருவரும் உலகிலிருந்து அகற்ற வேண்டும். ஒருவருக்கு இவ்வுலகிலேயே நிம்மதியும், இன்பமும் கிடைத்து விட்டால் அதனால் என்ன பயன்? உலகிலேயே நற்கூலி கிடைத்து விட்டால் அவருக்கு என்ன பயன்? மறுமையின் நற்கூலியைப் பெற்றுக் கொள்ளுங்கள். அது எல்லையற்றதாகும். இறைவனின் ஏகத்தவத்திற்காக ஒவ்வொருவருக்கும் உணர்வு இருக்க வேண்டும். இறைவனுக்கு தனது ஏகத்துவத்திற்கான உணர்வு இருப்பது போன்று நமக்கு இருக்க வேண்டும். உலகில் நமது நபி (ஸல்) அவர்களைப் போன்ற அநீதியிழைக்கப்பட்டவர் எங்கே கிடைப்பார்? என்பதை சீர்தூக்கிப் பாருங்கள். அன்னார் (ஸல்) மீது வீசப்படாத எந்த அசுத்தமும், ஏச்சுப் பேச்சுக்களும் இல்லை என்றே கூறலாம். முஸ்லிம்கள் மௌனமாக அமர்ந்திருக்கின்ற நேரமா இது? ஒருவேளை இந்த நேரத்தில் ஒருவர்

(தொடர்ச்சி 11 வது பக்கம்...)

## முழு பிரபஞ்சமும் ஒரே சங்கலித் தொடரில் பிணைக்கப்பட்டுள்ளதென்றால் அதனை உருவாக்கக் கூடியவன் ஏக இறைவனே ஆவான் என்பதை ஒப்புக் கொள்ள நேரிடும்

اِلٰـهُكُمۡ اِلٰـهٌ وَّاحِدٌ‌ ۚ فَالَّذِيۡنَ لَا يُؤۡمِنُوۡنَ بِالۡاٰخِرَةِ قُلُوۡبُهُمۡ مُّنۡكِرَةٌ وَّهُمۡ مُّسۡتَكۡبِرُوۡنَ (16:23)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சூரா அன்–நஹ்லின் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

உங்களது வணக்கத்திற்குரிய இறைவன் ஏக இறைவனாவான் என்று இறைவன் கூறியிருப்பது வெற்று வாதமல்ல. திருக்குர்ஆன் நிராகரிப்பாளர்களை நோக்கி ஒன்றை கூறும்போது அது வாதத்தை மட்டும் முன் வைப்பதில்லை. ஏனென்றால் அவர்களிடம் வாதம் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. மாறாக, அதுபோன்ற சந்தர்ப்பத்தில் திருக்குர்ஆன் இரண்டு வழிமுறைகளில் ஒன்றை மேற்கொள்கின்றது. ஒன்று வாதத்தை எடுத்துரைத்த பிறகு அத்துடன் அதற்கான சான்றையும் கூறுகின்றது. அல்லது சான்றுகளை எடுத்துரைத்த பிறகு அதன் விளைவை எடுத்துரைக்கின்றது. மனித மூளை ஆறுதல் அடைவதற்கு இவ்விரு இயற்கையான வழிமுறைகளே உள்ளன. இந்த இரண்டு வழிமுறைகளும் தத்தமது இடத்தில் மிகவும் தாக்கமிக்கதாகும். சில முறை வாதத்தை எடுத்துரைத்த பிறகு சான்றுகளை எடுத்துரைப்பது பயனுள்ளதாக இருக்கின்றது. சில முறை சம்பவங்களை எடுத்துரைத்த பிறகு அதன் இயற்கையான விளைவை எடுத்துரைப்பது பயனுள்ளதாக இருக்கின்றது. இந்த இடத்தில் இரண்டாவது வழிமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முந்தைய வசனத்தின் அறிவார்ந்த விளைவை எடுத்துரைக்கின்றது. முந்தைய வசனங்களில் இரண்டு கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஒன்று என்னவென்றால், அனைத்து பிரபஞ்சமும் ஒரே தொடர்பில் பிணைக்கப்பட்டுள்ளது. ஒன்று மற்றொன்றை சார்ந்துள்ளது. மனித படைப்பே அசல் ஆகும். மனிதனின் முதன்மை உணவு புலால் உணவாகும். விலங்கு மற்றும் மரங்கள் போன்றவற்றிலிருந்து அவன் உணவைப் பெறுகின்றான். பின்னர் அந்த மரங்களும், செடி

(தொடர்ச்சி 11 வது பக்கம்...)

## நபிமொழி

### மதீனாவின் சிறப்பு

1867: ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எல்லா ஊர்களையும் மிகைக்கக் கூடிய ஓர் ஊருக்கு (ஹிஜ்ரத் செய்து) செல்லுமாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எனக்கு கட்டளையிட்டார்கள். அது மதீனா (நகரம்) ஆகும். இரும்பின் துருவை உலை நீக்கி விடுவதைப் போல் மதீனா நகரம் தீயவர்களை (குப்பையைப் போன்று) வெளியேற்றிவிடும்.

ஹஸ்ரத் செய்யது ஜெய்னுலாபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் (ரஹ்) அவர்கள் இதற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: தீய கூட்டத்தினர் அதில் இல்லாதபோதுதான் மதீனாவின் சிறப்பு முழுமையாக நிலைத்திருக்க முடியும். பிற்காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த கூற்றை சொல்லுக்கு சொல் உண்மைப்படுத்தி விட்டது. யூத கோத்திரத்தினர் உடன்படிக்கையை முறித்தனர். வெளி எதிரிகளுடன் இரகசியமாக சதி திட்டம் தீட்டி மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்கச் செய்தனர். இறுதியில் தனது நம்பிக்கை துரோகத்தின் விளைவால் ஒருவருக்கு பின்னால் ஒருவர் மதீனாவிலிருந்து வெளியேற்றப்பட்டு விடட்னர். இஸ்லாமிய உலகின் முதன்மை தலைநகரமாக மதீனா ஆனபோதும், குலஃபாயே ராஷிதீன்களின் அருளுக்குரிய காலத்தில் மாபெரும் வெற்றிகள் கிடைத்தபோதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கூற்றின் மற்றொரு பகுதியும் நிறைவேறியது. ஏனைய ஊர்களை தின்று விடும் என்பதன் பொருள் அவை வெற்றி கொள்ளப்படும் என்பதே ஆகும்.

(ஸஹீஹ் புகாரி தொகுதி 3, கிதாப் ஃபஸாயீலுல் மதீனா – 2008 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


| |
|---|
| திருக்குர்ஆன் |
| நபிமொழி |
| மல்ஃபூஸாத் |
| தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை ) |
| ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை 21 ஜனவரி 2022 (முழுவதுமாக) |
| ஹுஸூர் அவர்களின் நியூஸிலாந்து சுற்றுப் பயயணம் 2013 |



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்த பிறகு முதன் முதலில் பள்ளிவாசல் கட்டுமானத்தின் பக்கம் கவனம் செலுத்தினார்கள்**

**சகோதரத்துவ பந்தம் இரண்டு முறை நடந்தது. முதல் முறை ஹிஜ்ரத்திற்கு முன்பாக மக்காவில் முஸ்லிம்களுக்கு மத்தியில் நிகழ்ந்தது**

**பின்னர் அன்னார் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்தபோது முஹாஜிர் மற்றும் அன்ஸார் சகோதரர்களுக்கு மத்தியில் ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களின் வீட்டில் சகோதரத்துவ பந்தத்தை நிலைநாட்டி இருநதார்கள்**

**பத்ர் போருக்காக புறப்பட்ட நேரத்தில் சஹாபிகளிடத்தில் 70 ஒட்டகங்கள் இருந்தன. எனவே ஒவ்வொரு ஒட்டகத்திலும் மூன்று, மூன்று நபர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் மாறி, மாறி சவாரி செய்து வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோர் ஓர் ஒட்டகத்தில் மாறி மாறி சவாரி செய்து வந்தார்கள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 21 ஜனவரி 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **21 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்றைய நாட்களில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் நற்குறிப்பு நடைபெற்று வருகின்றது. மதீனா சென்றடைந்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதன் முதலில் பள்ளிவாசல் கட்டுமானத்தின் பக்கம் கவனம் செலுத்தினார்கள். எனவே அது தொடர்பாக சீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: மதீனாவை உருவாக்குவதில் முதன் முதலில் நடந்த பணி மஸ்ஜிது நபவி கட்டுமான பணியாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெண் ஒட்டகம் எந்த இடத்தில் வந்து அமர்ந்ததோ அந்த இடம் மதீனாவின் இரண்டு முஸ்லிம் சிறுவர்களான சஹ்ல் மற்றும் சுஹைலுக்கு சொந்தமானதாக இருந்தது. ஹஸ்ரத் அஸ்அத் பின் ஸுராரா அவர்கள் கண்காணிப்பில் அந்த இரு சிறுவர்கள் இருந்து வந்தார்கள். அந்த இடம் தரிசு நிலமாக இருந்தது. அதன் ஒரு பகுதியில் ஆங்காங்கே பேரீச்ச மரங்கள் இருந்தன. மற்றொரு பகுதி பாழடைந்த இடமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதில் பள்ளிவாசல் மற்றும் தமக்கான அறைகள் கட்டுவதற்கு விரும்பினார்கள். அந்த காலத்தில் அதனுடைய விலை 10 தீனாராக இருந்தது. எவ்வாறிருப்பினும் 10 தீனாருக்கு அந்த நிலத்தை விலைக்கு வாங்கி விட்டார்கள். மேலும் அந்த இடத்தை சரி செய்து மரங்களை வெட்டி மஸ்ஜிது நபவி கட்டுமானப் பணி தொடங்கியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்து அடிக்கல் நாட்டினார்கள். குபா எனும் இடத்தில் பள்ளிவாசல் பணி நடந்ததுபோன்று சஹாபிகள் கட்டுமானம் மற்றும் கூலிப்பணிகளை செய்தனர். அதில் சில முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் சுயமே பங்கு பெற்று வந்தார்கள்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 269)

முன்னரே கூறப்பட்டதுபோன்று பள்ளிவாசல் மற்றும் அறைகள் கட்டுவதற்காக அந்த இடத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 10 தீனார் கொடுத்து வாங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் செல்வத்திலிருந்து அந்த தொகை வழங்கப்பட்டது என்று அறிவிப்புகளில் வருகின்றது.

(மவாஹிப் லித்துன்யா தொகுதி 1 பக்கம் 316 – 2004 ஆம் ஆண்டு இஸ்லாமி அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

பள்ளிவாசல் கட்டுமானம் தொடர்பாக மேலும் விளக்கம் இவ்வாறு கிடைக்கின்றது. கட்டுமானம் தொடங்கிய நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய கரத்தால் ஒரு செங்கலை வைத்தார்கள். பின்னர் அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களை அழைத்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செங்கலுடன் சேர்த்து ஒரு செங்கலை அன்னார் (ரலி) வைத்தார்கள். பின்னர் அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அழைத்தார்கள். அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் செங்கலுடன் சேர்த்து ஒரு செங்கலை வைத்தார்கள். பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் செங்கலுடன் சேர்த்து ஒரு செங்கலை வைத்தார்கள்.

மேலும் ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசல் கட்டியபோது அன்னார் (ஸல்) அவர்கள் ஒரு கல்லை வைத்து அடிக்கல் நாட்டினார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் உங்களுடைய கல்லை என்னுடைய கல்லுடன் சேர்த்து வையுங்கள் என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் உங்களது கல்லை ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் கல்லுடன் சேர்த்து வையுங்கள் என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் உங்களது கல்லை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கல்லுடன் சேர்த்து வையுங்கள் என்று கூறினார்கள்.

(அஸீரத்துன் ஹல்பியா தொகுதி 2 பக்கம் 90 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டில் முஹர்ரம் மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கைபர் போரிலிருந்து வெற்றி பெற்று திரும்பியபோது அன்னார் (ஸல்) அவர்கள் மஸ்ஜிது நபவியை விரிவுபடுத்தவும், புதிதாக கட்டுவதற்கும் கட்டளை வழங்கினார்கள். இந்த முறையும் அன்னார் (ஸல்) அவர்கள் சஹாபிகள் (ரிழ்வானுல்லாஹி அலைஹிம்) அனைவடனும் இணைந்து பள்ளிவாசல் கட்டுமானத்தில் பங்கு பெற்றார்கள்.

(ஜுஸ்தஜூயே மதீனா பக்கம் 446)

உபைதில்லாஹ் பின் அப்தில்லாஹ் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் வீடுகள் கட்டுவதற்காக நிலத்தை வழங்கியபோது ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்காக பள்ளிவாசலுக்கு அருகிலேயே அன்னாரின் வீட்டிற்குரிய நிலத்தை ஒதுக்கினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி சஅத் தொகுதி 3 பக்கம் 93 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரே அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் காரிஜா பின் ஸைது ஆகியோருக்கிடையில் சகோதரத்துவ பந்தத்தை நிலைநாட்டி இருந்தார்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் சகோதரத்துவ பந்தம் தொடர்பாக அறிவிப்புகளில் வருகின்றது.

(அல்அஸாபா ஃபீ மஃரூஃபத்திஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 190 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோருக்கிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தி இருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி சஅத் தொகுதி 3 பக்கம் 93 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரே அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் மக்காவில் சகோதரத்துவ பந்தம் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் சகோதரத்துவ பந்தம் தொடர்பான அறிவிப்பு கிடைக்கின்றது. இந்த சகோதரத்துவ பந்தம் மக்காவில் ஏற்பட்டிருந்தது.

அல்லாமா இப்னு அஸாகர் எழுதுகின்றார்கள்: அதாவது மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் ஆகியோருக்கிடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தி இருந்தார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்தபோது இரண்டு சகோதரத்துவ பந்தத்தை தவிர மற்ற சகோதரத்துவ பந்தத்தை ரத்து செய்திருந்தார்கள். அந்த இரண்டு சகோதரத்துவ பந்தம் மட்டும் நிலைபெற்றிருந்தது. அவற்றில் ஒன்று, அன்னார் (ஸல்) அவர்களுக்கும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கும் மத்தியில் இருந்தது. மற்றொன்று ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) ஆகியோருக்கு மத்தியில் இருந்தது.

(தாரீக் திமெஷ்க் தொகுதி 16 பக்கம் 63 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

சகோதரத்துவ பந்தம் எப்போது ஏற்பட்டது? இது தொடர்பாக வரலாற்றில் இந்த குறிப்பு கிடைக்கின்றது. சகோதரத்துவ பந்தம் இரண்டு முறை ஏற்பட்டது. எனவே சஹீஹ் புகாரியின் விரிவுரையாளர் அல்லாமா கஸ்கலானி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: சகோதரத்துவ பந்தம் இரண்டு முறை நடந்தது. முதல் முறை ஹிஜ்ரத்திற்கு முன்பாக மக்காவில் முஸ்லிம்களுக்கு மத்தியில் நிகழ்ந்தது. அதில் அன்னார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோருக்கு மத்தியிலும், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) ஆகியோருக்கு மத்தியிலும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோருக்கு மத்தியிலும், ஹஸ்ரத் சுபைர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அகியோருக்கு மத்தியிலும் ஏற்படுத்தி இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் தமக்கிடையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சகோதரத்துவ பந்தத்தை நிலைநாட்டி இருந்தார்கள். பின்னர் அன்னார் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்தபோது முஹாஜிர் மற்றும் அன்ஸார் சகோதரர்களுக்கு மத்தியில் ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களின் வீட்டில் சகோதரத்துவ பந்தத்தை நிலைநாட்டி இருநதார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் 100 சஹாபிகளுக்கு மத்தியில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தி இருந்ததாக இப்னு சஅத் அவர்கள் அறிவிக்கின்றார்கள். அதாவது 50 முஹாஜிர்கள் மற்றும் 50 அன்ஸார் சகோதரர்களுக்கு மத்தியில் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(இர்ஷாத் அஸ்ஸாரி, ஷரஹ் சஹீஹ் புகாரி தொகுதி 7 பக்கம் 133 ஹதீஸ் எண் 3937 – 2010 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

பத்ர் போர் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் பற்றி இவ்வாறு குறிப்பு வருகின்றது. அதாவது பத்ர் போர் ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு ரமலான் மாதத்தில் கி.பி 623 மார்ச் மாதம் நிகழ்ந்தது.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 349)

பத்ர் போருக்காக புறப்பட்ட நேரத்தில் சஹாபிகளிடத்தில் 70 ஒட்டகங்கள் இருந்தன. எனவே ஒவ்வொரு ஒட்டகத்திலும் மூன்று, மூன்று நபர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் மாறி, மாறி சவாரி செய்து வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோர் ஓர் ஒட்டகத்தில் மாறி மாறி சவாரி செய்து வந்தார்கள்.

(அஸீரத்துன் ஹல்பியா தொகுதி 2 பக்கம் 204 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போருக்காக புறப்பட்டது தொடர்பாக இவ்வாறு குறிப்பு வருகின்றது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூசுஃப்யான் குழுவினரை தடுத்து நிறுத்துவதற்காக மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். அக்குழு சிரியாவிலிருந்து வந்து கொண்டிருந்தது. முஸ்லிம் குழுவினர் ஸஃபீரான் பள்ளத்தாக்கை வந்தடைந்தனர். அது மதீனாவின் சுற்று வட்டாரத்தில் ஸஃப்ராவிற்கு அருகிலுள்ள ஒரு பள்ளத்தாக்கு ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு குரைஷியர்கள் தங்களது வணிகக்குழுவை பாதுகாப்பதற்காக புறப்பட்டுள்ளார்கள்என்ற செய்தி கிடைத்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபா பெருமக்களிடம் ஆலோசனை கேட்டார்கள். அப்போது மக்காவிலிருந்து ஒரு படை மிகவும் வேகத்துடன் புறப்பட்டுள்ளது என்ற செய்தி வந்துள்ளது. இது தொடர்பாக நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்? படைக்கு எதிராக வணிகக் குழுவை நீங்கள் அதிகம் விரும்புகின்றீர்களா? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஏன் இல்லை என்று அந்த மக்கள் கூறினர். அதாவது நாங்கள் எதிரி(ப் படை)யை விட வணிகக் குழுவை எதிர்கொள்வதை அதிகம் விரும்புகின்றோம் என்று ஒரு கூட்டம் கூறியது.

ஓர் அறிவிப்பில் குறிப்பு வருகின்றது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடம் போரைப் பற்றி ஏன் குறிப்பிடவில்லை? அவ்வாறு குறிப்பிட்டிருந்தால் நாங்கள் அதற்கு ஆயத்தமாகி இருப்போமே! நாங்கள் வணிகக் குழுவிற்கு எதிராகவே புறப்பட்டிருந்தோம் என்று ஒரு கூட்டம் கூறியது.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. அல்லாஹ்வின் தூதரே! வணிகக் குழுவின் பக்கமே தாங்கள் செல்ல வேண்டும். தாங்கள் எதிரியை விட்டு விடுங்கள் என்று அவர்கள் கூறினர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தின் நிறம் மாறியது.

ஹஸ்ரத் அபூஅய்யூப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

كَمَآ اَخْرَجَكَ رَبُّكَ مِنْۢ بَيْتِكَ بِالْحَقِّ ۖ

وَاِنَّ فَرِيْقًا مِّنَ الْمُؤْمِنِيْنَ لَكٰرِهُوْنَ ۙ﴿٦﴾

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களுள் ஒரு பிரிவினர் முற்றிலும் வெறுத்த போதிலும் உம் இறைவன் உம் இல்லத்திலிருந்து உம்மை ஒரு நன்நோக்கத்திற்காக வெளியேற்றியதனாலேயே (இந்த சன்மானம் கிடைக்கின்றது) (அன்ஃபால்:6) என்ற வசனம் இறங்குவதற்கு இந்த சம்பவமே காரணமாக இருந்தது. அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் உரையாடினார்கள். மிகவும் அழகிய முறையில் உரையாடினார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுந்தார்கள். அவர்களும் உரையாடினார்கள். மிகவும் அழகிய முறையில் உரையாடினார்கள். பின்னர் ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். அவர்களும் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தங்களுக்கு வழங்கிய கட்டளையின்படி செல்லுங்கள். நாங்கள் உங்களுடன் இருக்கின்றோம். அல்லாஹ்வின் மீது ஆணையாக!

فَاذْهَبْ اَنْتَ وَرَبُّكَ فَقَاتِلَآ اِنَّا هٰهُنَا قٰعِدُوْنَ

செல்லும். நீரும் உமது இறைவனும் சென்று போரிடுங்கள். நாங்கள் இங்கேயே அமர்ந்திருப்போம் என்று மூஸா (அலை) அவர்களிடம் பனீ இஸ்ராயீல் கூறியதுபோன்று நாங்கள் உங்களிடம் கூற மாட்டோம். நாங்கள் உங்களுடன் இணைந்து வெற்றி கொள்ளும் வரை போரிடுவோம். எங்களின் உயிர் இருக்கும் வரை உங்களுடன் சேர்ந்து போரிடுவோம் என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! எந்த இறைவன் தங்களை உண்மையுடன் அனுப்பியுள்ளானோ அந்த இறைவன் மீது ஆணையாக! தாங்கள் எங்களை பர்குல் கமாத் என்ற இடத்திற்கு அழைத்துச் சென்றாலும் நாங்கள் தங்களுடன் சேர்ந்து வாளுடன் போரிட்டவாறு சென்று விடுவோம். எந்த அளவுக்கென்றால் நாம் அங்கு சென்றடைந்து விடுவோம்.

பர்குல் கமாத் என்ற இடம் மக்காவிலிருந்து 5 இரவு பயணத் தொலைவிலுள்ள ஒரு நகரமாகும். அது கடலுடன் இணைந்துள்ள ஒரு நகரமாகும். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தை பார்த்தேன். அன்னாரின் முகம் இந்த விஷயத்தைக் கேட்டு மிகவும் மலர்ந்திருந்தது. மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் இந்த கூற்றினால் மிகவும் மகிழ்ச்சியடைந்திருந்தார்கள்.

(அஸீரத்துன் ஹல்பியா தொகுதி 2 பக்கம் 205, 206 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 475 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸகீரான் என்ற இடத்திலிருந்து புறப்பட்டார்கள். மேலும் பத்ர் மைதானத்திற்கு அருகில் தங்கினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அன்னாரின் நபித்தோழர்களில் ஒருவர் சவாரி செய்தார். இப்னு ஹஷ்ஷாமைப் பொருத்தவரை அந்த நபர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களாக இருந்தார்கள்.

மற்றோர் அறிவிப்பின்படி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பதிலாக ஹஸ்ரத் கதாதா பின் நுஃமான் (ரலி) அல்லது ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) ஆகியோர் இருந்தனர். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரேபியாவின் ஒரு முதியவரிடத்தில் தங்கினார்கள். அவரிடம் குரைஷியர்களைக் குறித்தும், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) மற்றும் அன்னாரின் தோழர்களைக் குறித்தும்

கேட்டறிந்தார்கள். அவர்களைக் குறித்து என்ன செய்தி உள்ளது? என்று கேட்டார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா பக்கம் 421 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் ஹலபிய்யா தொகுதி 2 பக்கம் 207 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பத்ர் மைதானத்தில் ஒன்றுகூடிவிட்ட பிறகு அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக தனியாக ஒரு கூடாரம் அமைக்கப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளைக் குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

அவ்ஸ் கோத்திரத்தின் தலைவர் சஅத் பின் மஆஸின் ஆலோசனைக்கேற்ப சஹாபிகள் மைதானத்தின் ஒரு பகுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக ஒரு கூடாரத்தை தயாரித்தார்கள். மேலும் சஅத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கால்நடையை அந்த கூடாரத்திற்கு அருகில் கட்டி விட்டு இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் இந்த கூடாரத்தில் தங்கியிருங்கள். நாங்கள் அல்லாஹ்வின் பெயரைக் கூறி எதிரியுடன் போர் செய்கின்றோம். பின்னர் ஹஸ்ரத் சஅத் (ரலி) மற்றும் ஏனைய சில அன்ஸார் சகோதரர்கள் அந்த கூடாரத்தை சுற்றி பாதுகாப்பு கொடுப்பதற்காக நின்று கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதே கூடாரத்தில் இரவைக் கழித்தார்கள்.

ஓர் அறிவிப்பில் குறிப்பு வருகின்றது. அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூடாரத்தில் திறந்த வாள்களை ஏந்திக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் பாதுகாப்பிற்காக நின்று கொண்டிருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவு முழுவதும் இறைவனின் சந்நிதானத்தில் அழுது மன்றாடி துஆ செய்தார்கள்.

மேலும் எழுதப்பட்டுள்ளது: முழு படையிலும் அன்னார் (ஸல்) மட்டுமே இரவு முழுவதும் விழித்திருந்தார்கள். ஏனைய அனைத்து மக்களும் ஒவ்வொருவராக மாறி, மாறி உறங்கி விட்டார்கள்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 375 & சபுலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 11 பக்கம் 398 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீரம் தொடர்பாக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு வருகின்றது. அன்னார் கூறுகின்றார்கள்: அன்னார் (ரலி) சஹாபிகளின் ஒரு கூட்டத்தினரிடம், மக்களில் மிகச் சிறந்த வீரரை எனக்கு கூறுங்கள் என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இவ்வாறு கேட்டபோது அதற்கு தாங்களே அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) என்று மக்கள் பதிலளித்தனர். அப்போது மக்களில் மிகச் சிறந்த வீரர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆவார்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) கூறினார்கள். மேலும் பத்ர் போர் நாளன்று நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக கூடாரம் ஒன்றை தயார் செய்தோம். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இணை வைப்பவர்கள் வந்தடைந்து விடாமல் இருப்பதற்காக அன்னார் (ஸல்) அவர்களுடன் யார் இருப்பார்? என்று நாங்கள் கேட்டோம். அப்போது அல்லாஹ்வின் மீது ஆணையாக! எங்களில் ஒருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் கூட செல்லவில்லை. ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வாளை ஏந்திக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைக்கு அருகில் சென்று நின்று கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் போரிடாத வரை எந்தவொரு இணை வைப்பவரும் அன்னார் (ஸல்) அவர்களை அடைய முடியாது.

(அஸீரத்துன் ஹல்பியா தொகுதி 2 பக்கம் 214 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஒரு முறை கூறினார்கள்: சஹாபிகளில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகச் சிறந்த வீரரும், தைரியசாலியும் ஆவார்கள். பின்னர் அன்னார் (ரலி) கூறினார்கள்: பத்ர் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக தனியாக ஒரு கூடாரம் ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதுகாப்பு பணியை யாரிடம் ஒப்படைப்பது என்ற கேள்வி எழுந்தது. அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உடனடியாக திறந்த வாளைக் ஏந்திக் கொண்டு எழுந்து நின்று விட்டார்கள். அந்த மிகவும் அபாயகரமான சந்தர்ப்பத்தில் மிகவும் தைரியத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதுகாப்பு கடமையை அன்னார் நிறைவேற்றினார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 7 பக்கம் 364, 365)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அன்னார் (ஸல்) அவர்கள் பத்ர் நாளன்று ஒரு பெரும் கூடாரத்தில் இருந்தார்கள்.

اَللّٰهُمَّ إِنِّي أَنْشُدُكَ عَهْدَكَ وَوَعْدَكَ،

اَللّٰهُمَّ إِنْ شِئْتَ لَمْ تُعْبَدْ بَعْدَ الْيَوْمِ

எனது அல்லாஹ்வே! நான் உனது உடன்படிக்கை மற்றும் உனது வாக்குறுதியின் மீது சத்தியம் செய்கின்றேன். எனது இறைவா! ஒருவேளை முஸ்லிம்களின் அழிவை நீயே விரும்புகின்றாய் என்றால் இன்றைக்குப் பிறகு உன்னை வணங்கக்கூடியவர் எவரும் இருக்க மாட்டார்.

இதற்கிடையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கரத்தை பிடித்து கொண்டார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நிறுத்துங்கள். தாங்கள் தங்களது இறைவனிடம் துஆ வேண்டுவதில் மிகவும் வலியுறுத்தி விட்டீர்கள் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அன்னார் (ஸல்) அப்போது கவசம் அணிந்திருந்தார்கள். அன்னார் (ஸல்) கூடாரத்திலிருந்து வெளியேறினார்கள். மேலும்

سَيُهْزَمُ الْجَمْعُ وَيُوَلُّوْنَ الدُّبُرَ ﴿٤٦﴾

بَلِ السَّاعَةُ مَوْعِدُهُمْ وَالسَّاعَةُ اَدْهٰى وَاَمَرُّ ﴿٤٧﴾

என்ற வசனத்தை ஓதிக் கொண்டிருந்தார்கள். மிக விரைவில் இவர்கள் அனைவரும் தோல்வியுற்று விடுவார்கள். மேலும் புறமுதுகு காட்டி விடுவார்கள். இந்த நேரத்தைக் குறித்து எச்சரிக்கப்பட்டிருந்தது. இந்த நேரம் மிகவும் கடுமையான மற்றும் மிகவும் கசப்பான நேரமாகும்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜிஹாத் ஹதீஸ் எண் 2915)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) என்னிடம் இவ்வாறு கூறினார்கள்: பத்ர் போர் நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இணை வைப்பவர்களை பார்த்தார்கள். அவர்கள் ஓராயிரம் நபர்கள் இருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்களின் சஹாபிகள் 319 நபர்களாக இருந்தனர். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கிப்லாவை நோக்கி முகத்தை திருப்பினார்கள். பின்னர் தனது இரண்டு கரங்களையும் விரித்தார்கள். மேலும் தமது இறைவனை உரத்த குரலில் அழைத்துக் கொண்டிருந்தார்கள்.

اَللّٰهُمَّ اَنْجِزْ لِيْ مَا وَعَدْتَّنِيْ اَللّٰهُمَّ اٰتِ مَا وَعَدْتَّنِيْ

اَللّٰهُمَّ اِنْ تُهْلِكْ هٰذِهِ الْعِصَابَةَ مِنْ اَهْلِ

الْاِسْلَامِ لَا تُعْبَدْ فِي الْاَرْضِ

இந்த துஆவை செய்தார்கள். பொருள்: அல்லாஹ்வே! நீ என்னுடன் செய்த வாக்குறுதியை முழுமை செய்வாயாக. அல்லாஹ்வே! நீ என்னுடன் செய்த வாக்குறுதியை எனக்கு முழுமை செய்வாயாக. அல்லாஹ்வே! நீ முஸ்லிம்களின் இந்த கூட்டத்தை அழித்து விட்டால் பூமியில் உனது இறைவணக்கம் நடைபெறாது. கிப்லாவை நோக்கி முகம் திருப்பி இரண்டு கரங்களையும் ஏந்தி அன்னார் (ஸல்) அவர்கள் தொடர்ந்து தனது இறைவனை உரத்த குரலில் அழைத்துக் கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னாரின் போர்வை அன்னார் (ஸல்) அவர்களின் தோளிலிருந்து கீழே விழுந்து விட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்களின் போர்வையை எடுத்து, அதனை அன்னார் (ஸல்) அவர்களின் தோளில் போட்டார்கள். பின்னர் அன்னார் (ஸல்) அவர்களை பின்புறமாக அணைத்துக் கொண்டார்கள். மேலும், அல்லாஹ்வின் நபியே! தாங்கள் தங்களது இறைவனின் சந்நிதானத்தில் வேதனையுடன் செய்த துஆவே தங்களுக்கு போதுமானதாகும் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். இறைவன் தங்களிடம் செய்த வாக்குறுதியை நிச்சயம் முழுமை செய்வான். அப்போது அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்.

اِذْ تَسْتَغِيْثُوْنَ رَبَّكُمْ فَاسْتَجَابَ لَكُمْ

اَنِّيْ مُمِدُّكُمْ بِاَلْفٍ مِّنَ الْمَلٰٓئِكَةِ مُرْدِفِيْنَ ﴿١٠﴾

நினைவிற் கொள்ளுங்கள். நீர் உமது இறைவனிடம் முறையிட்டுக் கொண்டிருந்தீர். அவன் உமது முறையீட்டை ஒப்புக் கொண்டு விட்டான். நான் நிச்சயம் ஓராயிரம் வானவர்களின் படையைக் கொண்டு உமக்கு உதவி செய்வேன் என்று அவன் வாக்குறுதி செய்தான்.

எனவே அல்லாஹ் வானவர்களுடன் அன்னார் (ஸல்) அவர்களுக்கு உதவி செய்தான்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஜிஹாத் ஹதீஸ் எண் 4588)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் பத்ர் போர் சம்பவங்களைக் குறிப்பிட்டவாறு அதன் விளக்கத்தை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) சஹாபிகளை நோக்கி இவ்வாறு கூறினார்கள்: நிராகரிப்பாளர்களின் படையில் மன மகிழ்ச்சியுடன் இந்த திட்டத்தில் பங்கு பெறாத சில மக்களும் உள்ளனர். இன்னும் கூறப்போனால் அவர்கள் குரைஷிய தலைவர்களின் அழுத்தத்தின் காரணமாக கலந்து கொண்டுள்ளார்கள். ஏனென்றால் அவர்களின் உள்ளத்தில் நாம் எதிரிகள் அல்ல. அதேபோன்று மக்காவில் நமது துன்பத்தின் நேரத்தில் நம்முடன் கண்ணியமாக நடந்து கொண்ட சில மக்களும் இந்தப் படையில் கலந்து கொண்டுள்ளனர். எனவே நமது கடமை என்னவென்றால், நன்மைக்கு பகரமாக நன்மை செய்ய வேண்டும். அதுபோன்ற, எந்தத் துன்பமும் வழங்காத ஒரு நபரை ஒரு முஸ்லிம் வெற்றி கொண்டால் அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

அன்னார் (ஸல்) அவர்கள் குறிப்பாக முதல் வகை மக்களில் அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் அவர்களையும், இரண்டாம் வகையில் அபுல் பஹ்தரியின் பெயரையும் குறிப்பிட்டார்கள். மேலும் அவர்களை கொலை செய்வதை தடை செய்தார்கள். ஆனால் சூழ்நிலை எப்படிப்பட்ட தவிர்க்க முடியாத நிலையை எட்டியது என்றால் அபுல் பஹ்தரி கொலை செய்யப்படுவதிலிருந்து தப்பிக்க முடியவில்லை. ஆயினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னை கொலை செய்வதை தடுத்துள்ளார்கள் என்பதை அவர் மரணிப்பதற்கு முன்பே அறிந்து விட்டார்.

சஹாபிகளிடம் இதனைக் கூறிய பிறகு அன்னார் (ஸல்) அவர்கள் கூடாரத்திற்குள் சென்று மீண்டும் துஆவில் மூழ்கி விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் உடன் இருந்தார்கள். கூடாரத்தை சுற்றிலும் அன்ஸார் சகோதரர்களின் ஒரு கூட்டம் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களின் தலைமையில் பாதுகாப்புப் பணியில் நியமிக்கப்பட்டிருந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு மைதானத்திலிருந்து ஒரு கடும் இரைச்சல் வந்தது. குரைஷிய படை பொதுவான தாக்குதலை நடத்தி விட்டது என்பது தெரிய வந்தது. அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் உருக்கத்துடன் இறைவன் முன் கையேந்தியவாறு துஆ செய்து கொண்டிருந்தார்கள். மிகவும் மன வேதனையின் நிலையில் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள்:

اَللّٰهُمَّ اِنِّيْ اَنْشُدُكَ عَهْدَكَ وَوَعْدَكَ

اَللّٰهُمَّ اِنْ تُهْلِكْ هٰذِهِ الْعِصَابَةَ مِنْ اَهْلِ

الْاِسْلَامِ لَا تُعْبَدْ فِي الْاَرْضِ

என் இறைவா! நீ உனது வாக்குறுதிகளை முழுமை செய். எனது எஜமானனே! முஸ்லிம்களின் இந்தக் கூட்டம் இன்று இந்த மைதானத்தில் அழிந்து விட்டால் பின்னர் உலகில் உன்னை வணங்குபவர் எவரும் இருக்க மாட்டார். அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உருக்கமான நிலை எந்த அளவுக்கு இருந்ததென்றால், சில நேரம் அன்னார் (ஸல்) சஜ்தாவில் வீழ்ந்து விடுவார்கள். சில முறை நின்று கொண்டு இறைவனை அழைப்பார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்களின் போர்வை அன்னார் (ஸல்) அவர்களின் தோள்களிலிருந்து கீழே விழுந்து விடும். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதனை மீண்டும் மீண்டும் எடுத்து அன்னார் (ஸல்) தோளில் போடுவார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: போரிடும்போது எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எண்ணம் தோன்றிக் கொண்டிருக்கும். உடனடியாக நான் அன்னார் (ஸல்) அவர்களின் கூடாரத்தை நோக்கி ஓடி விடுவேன். ஆனால் நான் சென்றபோதெல்லாம் அன்னார் (ஸல்) அவர்கள் சஜ்தாவில் மன்றாடிக் கொண்டிருப்பதையே நான் பார்த்தேன். மேலும் அன்னார் அருளுக்குரிய நாவால் இந்த சொற்களை உச்சரித்துக் கொண்டிருந்ததை நான் செவியுற்றேன்.

يَا حَيُّ يَا قَيُّوْمُ، يَا حَيُّ يَا قَيُّوْمُ

எனது உயிருள்ள இறைவனே! எனக்கு உயிரளிக்கும் எனது எஜமானனே!

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரின் இந்த நிலையைக் கண்டு நிம்மயிழந்து கொண்டே சென்றார்கள். சில முறை நிம்மதியிழந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தாய், தந்தை தங்கள் (ஸல்) மீது அர்ப்பணம். தாங்கள் பதற்றமடைய வேண்டாம். அல்லாஹ் நிச்சயம் தனது வாக்குறுதியை முழுமை செய்வான் என்று கூறி வந்தார்கள். ஆனால் இந்த உண்மையான عارف تراست ترساں تر கவிதைக்கேற்ப அன்னார் (ஸல்) செயல்பட்டார்கள். அதாவது ஒவ்வொருவரும் எவ்வளவு இறைஞானம் பெற்றிருப்பாரோ அதற்கேற்ப அவர் அஞ்சிக் கொண்டிருப்பார். எனவே அன்னார் (ஸல்) அவர்கள் தொடர்ந்து துஆவிலும் மன்றாடுதலிலும் மும்முரமாக இருந்தார்கள்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 360, 361)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பத்ர் போர் சந்தர்ப்பத்தில் அன்னார் (ஸல்) அவர்களுடன் என்னவெல்லாம் நடந்ததோ அவை அனைத்தும் அகப்பார்வை கொண்டவர்களின் கண்களை குளிர்ச்சியூட்டுவதற்கு போதுமானதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் அல்லாஹ்வின் மீதான அச்சம் எந்த அளவுக்கு இருந்தது என்பது அதிலிருந்தும் தெரிய வருகிறது. பத்ர் போர் சந்தர்ப்பத்தில் எதிரியுடன் போரிடுவதில் அன்னார் (ஸல்) அவர்கள் தனது உயிரை அர்ப்பணிக்கும் வீரர்களை அழைத்துக் கொண்டு சென்றிருந்தார்கள். இறை உதவிக்கான தாக்கங்களும் வெளிப்பட்டிருந்தன. நிராகரிப்பாளர்கள் தமது பாதங்களை நிலைநிறுத்துவதற்காக சரியான இடத்தில் முகாமிட்டிருந்தார்கள். முஸ்லிம்களுக்கு மணல் நிறைந்த இடத்தை விட்டிருந்தார்கள். ஆனால் இறைவன் மழையை அனுப்பி நிராகரிப்பாளர்களின் கூடாரத்தை சேறும், சகதியுமாக ஆக்கி விட்டான். முஸ்லிம்களின் தங்குமிடம் உறுதியாகி விட்டது.

அதேபோன்று மேலும் விண்ணின் உதவிகள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால் எவ்வாறிருந்தபோதிலும் அல்லாஹ்வின் அச்சம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் எந்த அளவிற்கு மேலோங்கி இருந்ததென்றால் அனைத்து வாக்குறுதிகள் மற்றும் அடையாளங்களுக்கு மத்தியிலும் இறைவன் தேவையற்றவன் என்பதை எண்ணி அன்னார் (ஸல்) அவர்கள் பதற்றமடைந்து கொண்டிருந்தார்கள். மேலும் நிம்மதியிழந்து அவனது சந்நிதானத்தில் முஸ்லிம்களுக்கு வெற்றி வழங்குவாயாக என்று துஆ செய்து கொண்டிருந்தார்கள்.

எனவே ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர்போர் கூடாரத்தில் இருந்தார்கள். எனது இறைவா! நான் உனது வாக்குறுதி மற்றும் உடன்படிக்கையை நினைவூட்டுகின்றேன். அதனை முழுமை செய்யும்படி நான் வேண்டுகின்றேன். எனது இறைவா! நீ ஒருவேளை முஸ்லிம்களின் அழிவை விரும்புகின்றாய் என்றால் இன்றைக்குப் பிறகு உன்னை வணங்கக் கூடியவர் எவரும் இருக்க மாட்டார்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களின் கரத்தை பற்றிக் கொண்டார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! போதும் நிறுத்தி விடுங்கள். தாங்கள் உங்களது இறைவனிடத்தில் துஆ கேட்பதில் உச்சத்தை அடைந்து விட்டீர்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நேரத்தில் போர் கவசம் அணிந்திருந்தார்கள். அன்னார் (ஸல்) கூடாரத்திலிருந்து வெளியே வந்து இவ்வாறு கூறினார்கள்:

இனி (எதிரிகளின்) இந்தப் படைகள் தோற்று விடும். மேலும் அவர்கள் புறமுதுகு காட்டி ஓடி விடுவார்கள். இன்னும் கூறப்போனால் இந்த நேரம் அவர்களின் முடிவுக்கான நேரமாகும். இந்த நேரம் அவர்களுக்கு மிகவும் கடுமையான மற்றும் கசப்பான நேரமாகும்.

அல்லாஹ்! அல்லாஹ்! இறையச்சம் எப்படிப்பட்டதாக இருந்ததென்றால் வாக்குறுதி வழங்கப்பட்ட பிறகும் இறைவன் தேவையற்றவன் என்ற எண்ணம் இருந்தது. அதே நேரம் நம்பிக்கையும் எப்படி இருந்ததென்றால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறியபோது உரத்த குரலில் இதனை அறிவித்தார்கள்: அதாவது நான் அஞ்சவில்லை. மாறாக, எதிரி தோல்வியடைந்து இழிவடைந்து விடுவான். நிராகரிப்பாளர்களின் தலைவர்கள் இங்கேயே கொல்லப்படுவார்கள் என்று இறைவன் புறமிருந்து எனக்கு தகவல் தரப்பட்டிருந்தது. பின்னர் அவ்வாறே நடந்தது.

(சீரத்துன் நபி (ஸல்), அன்வாருல் உலூம் தொகுதி 1 பக்கம் 466, 467)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிராகரிப்பாளர்களின் மீது

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

வெற்றி பெறுவார்கள் என்ற வாக்குறுதி திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இஸ்லாத்தின் முதல் போராக இருந்த பத்ர் போர் தொடங்கியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது துஆ செய்ய தொடங்கி விட்டார்கள். மேலும் இந்த சொற்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நாவிலிருந்து வெளிப்பட்டது.

اَللّٰهُمَّ اِنْ اَهْلَكْتَ هٰذِهِ الْعِصَابَةَ

فَلَنْ تُعْبَدَ فِي الْاَرْضِ أَبَدًا

பொருள்: எனது இறைவா! இன்று நீ ஒருவேளை இந்த ஜமாஅத்தை (வெறும் 131 நபர்களை) அழித்து விட்டால் பின்னர் கியாமத் வரை எவரும் உன்னை வணங்க மாட்டார். இந்த சொற்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நாவிலிருந்து கேட்டபோது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் இந்த அளவிற்கு ஏன் நிம்மதி இழந்துள்ளீர்கள்? நான் வெற்றியை வழங்குவேன் என்று இறைவன் தங்களுக்கு உறுதியான வாக்குறுதி வழங்கியுள்ளானே! என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அப்போது அன்னார் (ஸல்) அவர்கள், இது உண்மையாகும். ஆனால் அவன் தேவையற்றவன் என்ற இறைவனது பண்பு என் கண் முன்னால் உள்ளது என்று கூறினார்கள். அதாவது ஒரு வாக்குறுதியை முழுமை செய்தாக வேண்டும் என்று இறைவன் மீது எந்த நிர்பந்தமும் இல்லை.

(பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5, ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 255, 256)

மிகக் கடுமையான போர் தொடங்கியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூடாரத்திலிருந்து வெளியே வந்தார்கள். மேலும் மக்களை போரிடுமாறு கூறினார்கள். மக்கள் தங்களது வரிசைகளில் நின்று கொண்டு அல்லாஹ்வை நினைவு கூர்ந்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் சுயமே மிகவும் அதிகமாக போர் புரிந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்களின் ஒரு பக்கத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தன்னிகரற்ற வீரம் வெளிப்பட்டது. அன்னார் (ரலி) வரம்புமீறிய ஒவ்வொரு நிராகரிப்பாளரிடமும் சண்டையிடுவதற்கு தயாராக இருந்தார்கள். அந்த நபர் அன்னார் (ரலி) அவர்களின் மகனாக இருந்தாலும் சரியே!

அந்தப் போரில் அன்னார் (ரலி) அவர்களின் மகன் அப்துர் ரஹ்மான் நிராகரிப்பாளர்கள் சார்பாக போர் புரிவதற்கு வந்திருந்தார். மேலும் அவர் அரபு நாட்டின் மாபெரும் வீரராக கருதப்பட்டிருந்தார். குரைஷிகளில் அம்புகளை எய்வதில் மிகச் சிறந்த நிபுணராக இருந்தார். அன்னார் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டபோது தனது தந்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், பத்ர் நாளன்று தாங்கள் எனக்கு முன்னால் மிகத் தெளிவான இலக்கில் வந்து விட்டீர்கள். ஆனால் நான் தங்களிடமிருந்து விலகிக் கொண்டேன். மேலும் நான் உங்களை கொலை செய்யவில்லை என்று அன்னார் கூறினார்கள். அப்போது ஒருவேளை நீ எனது இலக்கில் வந்திருந்தால் நான் உன்னை விட்டு விலகி இருக்க மாட்டேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(முஹம்து ஸலாபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா அபூபக்ர் (ரலி) ஷக்ஸிய்யத் வ கார்னாமே என்ற நூல் பக்கம் 108, 109 – பாகிஸ்தானிலுள்ள அல்ஃபுர்கான் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த குறிப்பை செய்தவாறு கூறுகின்றார்கள்: அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் விருந்தில் கலந்து கொண்டிருந்தார்கள். பல்வேறு விஷயங்கள் பற்றி பேசப்படத் தொடங்கின. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மூத்த மகனாக இருந்தார்கள். பின்நாட்களில் முஸ்லிமாகி விட்டார்கள். அன்னார் பத்ர் அல்லது உஹது போரில் நிராகரிப்பாளர்கள் சார்பாக போரில் பங்கு பெற்றிருந்தார்கள். அவர்கள் உணவு உண்டு கொண்டிருக்கும்போது கூறினார்கள்: எனது தந்தையே! இந்தப் போரில் இந்த இடத்தை தாங்கள் கடந்து கொண்டிருந்தீர்கள். அப்போது நான் ஒரிடத்தில் ஒரு கல்லுக்குப் பின்னால் ஒளிந்து மறைந்திருந்தேன். நான் விரும்பி இருந்தால் தாக்குதல் நடத்தி தங்களை அழித்திருக்க முடியும். ஆனால் நான் அவ்வாறு செய்யவில்லை. எனது தந்தையை ஏன் கொல்ல வேண்டும் என்று நான் கூறினேன். அதற்கு, இறைவன் உனக்கு ஈமானை வழங்கி விட்டான். எனவே நீ தப்பித்துக் கொண்டாய். இல்லையென்றால் இறைவன் மீது ஆணையாக! ஒருவேளை நான் பார்த்திருந்தால் நிச்சயமாக நான் உன்னை கொன்றிருப்பேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 9 பக்கம் 588)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போர் கைதிகள் தொடர்பாக செய்த ஆலோசனை மற்றும் அதில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்து என்னவாக இருந்தது என்பதைப் பற்றி பார்ப்போம். அதன் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்திற்கேற்பவே செயல்படுத்தப்பட்டது. இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: மதீனா வந்தடைந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், கைதிகள் தொடர்பாக என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை செய்தார்கள். பொதுவாக அரபு நாட்டில் கைதிகளை கொன்று விடுவதும் அல்லது நிரந்தரமாக அடிமையாக்கிக் கொள்வதும் வழக்கமாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இயல்பில் இந்த விஷயம் மிகவும் வெறுக்கத்தக்கதாக இருந்தது. அதுமட்டுமல்ல அதுவரை அது தொடர்பாக எந்த இறைக் கட்டளைகளும் இறங்கியிருக்கவில்லை.

எனது கருத்தின்படி அவர்களிடம் இழப்பீடு தொகை பெற்றுக் கொண்டு அவர்களை விட்டு விட வேண்டும். ஏனென்றால் அந்த மக்கள் நமது சொந்த பந்தங்களே ஆவர். இதே மக்களிலிருந்து இஸ்லாத்திற்காக அர்ப்பணமாகின்றவர்கள் தோன்றினால் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த கருத்தை கடுமையாக எதிர்த்தார்கள். மார்க்க விவகாரத்தில் உறவுகளை எந்த வகையிலும் கருத்தில் கொள்ளக் கூடாது. இவர்களின் செயல்களால் கொலை செய்யப்படுதற்கு தகுதி பெற்றவர்களாக இவர்கள் ஆகி விட்டனர். எனவே எனது கருத்தின்படி இவர்களை கொலை செய்ய வேண்டும். இன்னும் கூறப்போனால் முஸ்லிம்கள் தமது கைகளால் தங்களது உறவினர்களை கொலை செய்ய வேண்டும் என்று கட்டளை வழங்க வேண்டுமென ஹஸ்ரத் உமர் (ரலி) கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது இயல்பின் கருணையால் தாக்கத்திற்குள்ளாகி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்தை விரும்பினார்கள். மேலும் கொலை செய்ய வேண்டும் என்ற ஆலோசனைக்கு எதிராக தீர்ப்பு வழங்கினார்கள். மேலும் எந்த இணை வைப்பவர்கள் தமது ஈட்டுத் தொகை போன்றவற்றை செலுத்தி விடுவார்களோ அவர்களை விடுதலை செய்து விட வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். எனவே பிறகு அதற்கேற்ப இறை கட்டளையும் இறங்கியது.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 367, 368)

மதீனாவில் ஒரு முறை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஏனைய சஹாபிகள் நோய்வாய்ப்பட்டனர். இது தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு உள்ளது. அன்னார் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் பிலால் (ரலி) ஆகியோருக்கு காய்ச்சல் ஏற்பட்டது. நான் அவர்கள் இருவரிடத்திலும் சென்றேன். தந்தையே! நீங்கள் உங்களது உடல்நலத்தை எப்படி பார்க்கின்றீர்கள்? என்றும், பிலாலே! நீர் உம்மை எப்படி காண்கின்றீர்? என்றும் இருவரிடமும் நாம் விசாரித்தேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் அன்னார் இந்த கவிதை வரிகளை படிப்பார்கள் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

كُلُّ امْرِءٍ مُصَبَّحٌ فِيْ أَهْلِهٖ

وَالْمَوْتُ أَدْنٰى مِنْ شِرَاكِ نَعْلِهٖ

வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் காலையில் எழும்போது அவருக்கு உடல் ஆரோக்கியத்திற்கான துஆ வழங்கப்படுகின்றது. உண்மை நிலை என்னவென்றால், மரணம் அவரது காலணியின் கயிறை விடவும் அருகில் உள்ளது.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கு காய்ச்சல் குறைந்து விட்டால் மிக உரத்த குரலில் அழுது கொண்டே சில கவிதைகளை படிப்பார்கள். அதில் மக்காவை சுற்றியிருந்த ஊர்களின் குறிப்பும்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

இடம் பெற்றது. மேலும் அதனை அன்னார் நினைவு கூர்ந்து வந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தேன். மேலும் அனைத்து நிலவரங்களையும் அன்னார் (ஸல்) அவர்களிடம் எடுத்துரைத்தேன். அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்ன கூறினார்கள்? என்பதையும், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் என்ன கூறினார்கள்? என்பதையும் எடுத்துரைத்தேன். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள்! இவ்வாறு துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! எங்களுக்கு மக்கா நேசத்திற்குரியதாக இருப்பதைப் போன்றோ அல்லது அதை விட அதிகமாகவோ மதீனாவையும் எங்களுக்கு நேசத்திற்குரியதாக ஆக்கி விடுவாயாக. மேலும் அதனை ஆரோக்கியம் வழங்கும் இடமாக ஆக்குவாயாக. மேலும் எங்களுக்காக அதன் விளைச்சலிலும் சாஃ மற்றும் முத் ஆகியவற்றிலும் பரக்கத்தை வழங்குவாயாக.

இந்த முத் மற்றும் சாஃ என்பது எடை பார்க்கும் அளவுகோல் ஆகும்.

மேலும் அவரது காய்ச்சலை இங்கிருந்து எடுத்துக் கொண்டு சென்று ஜுஹ்ஃபாவின் பக்கம் மாற்றி விடுவாயாக. ஜுஹ்ஃபா என்பது மக்காவிலிருந்து மதீனாவை நோக்கி 82 மைல் தொலைவிலுள்ள ஓர் இடமாகும்.

(சஹீஹுல் புகாரி, கிதாப் மனாகிப் அன்ஸார்... ஹதீஸ் எண் 3926 & ஷரஹ் ஸர்கானீ தொகுதி 2 பக்கம் 172 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உஹது போர் தொடர்பாக அறிவிப்புகள் உள்ளன. இந்தப் போர் ஷவ்வால் மாதம் 3 ஆம் ஹிஜ்ரி (கி.பி. 624) ஆம் ஆண்டு முஸ்லிம்கள் மற்றும் மக்கத்து குரைஷிகளுக்கு இடையே நிகழ்ந்தது. ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டின் இறுதியில் மக்கத்து குரைஷிகளையும், அவர்களின் நட்புக் கோத்திரங்களையும் உள்ளடக்கிய படை மதீனாவின் மீது படையெடுத்து வருகின்ற தகவல் கிடைத்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களை ஒன்றுகூட்டி குரைஷிகளின் தாக்குதல்கள் தொடர்பாக தகவல் கொடுத்து, மதீனாவிலேயே இருந்து கொண்டு அவர்களை எதிர்கொள்ள வேண்டுமா? அல்லது வெளியேறி செல்ல வேண்டுமா? என்று அவர்களிடம் ஆலோசனை கேட்டார்கள்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 483, 484)

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களை ஒன்றுகூட்டி குரைஷிகளின் இந்த தாக்குதல் தொடர்பாக அவர்களிடம் மதீனாவிலேயே தங்கியிருந்து எதிர்கொள்ள வேண்டுமா? அல்லது மதீனாவை விட்டு வெளியேறி எதிர்கொள்ள வேண்டுமா? என்று ஆலோசனை கேட்டார்கள். ஆலோசனைக்கு முன்பு குரைஷிய தாக்குதல்கள் மற்றும் அவர்களின் கொடூர எண்ணங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் இன்று இரவில் நான் ஒரு பசுவை கனவில் கண்டேன். மேலும் எனது வாளின் முனை உடைந்து விட்டதையும் நான் கனவில் கண்டேன். பின்னர் அந்த பசு பலியிடப்படுவதையும் நான் கண்டேன். நான் எனது கரத்தை ஒரு வலிமையான மற்றும் பாதுகாப்பான கவசத்திற்குள் வைப்பதையும் கனவில் கண்டேன் என்று கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பில் இந்த விஷயமும் இடம் பெற்றுள்ளது. அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் கனவில் ஒரு செம்மறி ஆட்டை கண்டேன். அதன் முதுகில் நான் அமர்ந்துள்ளேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் இந்த கனவிற்கு என்ன விளக்கம் வழங்குகின்றீர்கள்? என்று சஹாபிகள் கேட்டனர். அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பசு அறுக்கப்படுவதிலிருந்து நான் புரிவது என்னவென்றால், எனது சஹாபிகளில் சிலர் ஷஹீதாகி விடுவார்கள். எனது வாளின் முனை உடைந்து விடுவது என்பதில் எனது அன்பர்களில் யாராவது ஒருவரின் ஷஹாதத்தின் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாக தெரிகிறது. ஒருவேளை சுயம் எனக்கும் இந்த போரில் ஏதாவது துன்பம் நேரிடலாம். கவசத்திற்குள் கையை போடுவதிலிருந்து நான் புரிந்து கொள்வது என்னவென்றால், இந்த தாக்குதலை எதிர்கொள்வதற்கு நாம் மதீனாவிற்குள் தங்கி இருப்பதே மிகவும் உகந்ததாகும்.

செம்மறி ஆட்டின் மீது சவாரி செய்கின்ற கனவிற்கு அன்னார் இவ்வாறு பொருள் வழங்கினார்கள். அதாவது இதிலிருந்து நிராகரிப்பாளர்களின் படையின் தலைவர் அதாவது கொடியை ஏந்தி வருபவர் என்பது பொருளாகும். அவர் இன்ஷா அல்லாஹ் முஸ்லிம்களின் கரங்களால் கொல்லப்பட்டு விடுவார். இதன் பிறகு அன்னார் (ஸல்) அவர்கள் தற்போதைய சூழலில் என்ன செய்ய வேண்டுமென்று ஆலோசனை தரும்படி கூறினார்கள். சில பெரும் சஹாபிகள் சூழலின் கூடுதல் குறைவை சிந்தித்தும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கனவின் தாக்கத்திற்கு உள்ளாகியும் இவ்வாறு கருத்து கூறினார்கள்: அதாவது மதீனாவில் இருந்து கொண்டு எதிர்கொள்வதே சிறந்ததாகும் என்று கூறினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இதே கருத்தையே விரும்பினார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள், நான் மதீனாவில் இருந்து கொண்டே எதிர்கொள்வதை நான் சிறந்ததாக கருதுகிறேன் என்று கூறினார்கள். ஆனால் பெரும்பாலான சஹாபிகள் அதாவது இளைஞர்கள் அதுவும் பத்ர் போரில் கலந்து கொண்டிராத சஹாபிகள் தனது ஷஹாதத் மூலம் மார்க்கத் தொண்டிற்கு சந்தர்ப்பம் கிடைத்து விட வேண்டும் என்று நிம்மதி இழந்திருந்தார்கள். அத்தகைய நபர்கள் நகரத்தை விட்டு வெளியில் திறந்த மைதானத்திற்கு சென்று போரிட வேண்டும் என்று மிகவும் வலியுறுத்திக் கூறினார்கள். அந்த மக்கள் எந்த அளவிற்கு வலியுறுத்தி தனது கருத்தை முன் வைத்தார்கள் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் உணர்வைக் கண்டு அவர்களின் கூற்றை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். மேலும் நாம் திறந்த மைதானத்திற்கு சென்று நிராகரிப்பாளர்களை எதிர்கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தார்கள்.

பின்னர் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அன்னார் (ஸல்) அவர்கள் இறைவழியில் ஜிஹாத் செய்யும் நோக்கத்துடன் இந்தப் போரில் பங்கு பெற்று நற்கூலி பெற்றுக் கொள்ளுங்கள் என்று முஸ்லிம்களிடம் பொதுவான அறிவிப்பு செய்தார்கள். அதன் பிறகு அன்னார் (ஸல்) அவர்கள் தனது வீட்டிற்குள் சென்று விட்டார்கள். அங்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உதவியுடன் அன்னார் (ஸல்) அவர்கள் தலைப்பாகையை அணிந்து கொண்டார்கள். பின்னர் உடை அணிந்தார்கள். மேலும் ஆயுதங்களை ஏந்திக் கொண்டு அல்லாஹ்வின் பெயரை நினைவு கூறி வெளியே வருகை தந்தார்கள். ஆயினும் இதற்கிடையில் சில சஹாபிகளின் கூற்றினால் அந்த இளைஞர்கள் தமது தவறை உணர்ந்து கொண்டார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருத்திற்கு எதிரில் தனது கருத்தை வலியுறுத்தி கூறியிருக்கக் கூடாது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

இந்த உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டபோது அவர்களில் பெரும்பாலானவர்கள் வெட்கி தலை குனிந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆயுதம் ஏந்தி, இரண்டு போர் கவசங்களை அணிந்து வருவதை அந்த மக்கள் பார்த்தபோது அவர்களின் வெட்க உணர்வு மேலும் அதிகமாகி விட்டது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களிடம் தவறு ஏற்பட்டு விட்டது. தங்களின் கருத்திற்கு எதிரில் எங்களின் கருத்தை நாங்கள் வலியுறுத்திக் கூறி விட்டோம் என்று ஒருமித்த குரலில் கூறினர். தாங்கள் எவ்வாறு விரும்புகின்றீர்களோ அவ்வாறே நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். இன்ஷா அல்லாஹ் அதில் பரக்கத் ஏற்படும் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவனின் நபி ஆயுதம் ஏந்திய பிறகு இறைவன் ஏதாவது தீர்ப்பை வழங்குவதற்கு முன்பாக அதனை கீழே வைத்து விடுவது அவரது கண்ணியத்திற்கு எதிரானதாகும். எனவே இனி அல்லாஹ்வின் பெயரை நினைவுகூர்ந்து புறப்படுங்கள். நீங்கள் பொறுமையுடன் செயல்பட்டால் பின்னர் அல்லாஹ்வின் உதவி உங்களுடன் இருக்கும் என்பதை உறுதியாக நம்புங்கள்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 484 – 486)

உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாளை கையில் ஏந்திக் கொண்டு இதற்கான உரிமையை நிறைவேற்றுபவர் யார்? என்று கூறினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அந்த வாள் தமக்கு வழங்கப்பட வேண்டும் என்று விருப்பத்தை வெளிப்படுத்திய சஹாபிகளில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அடங்குவார்கள்.


**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

(ஷரஹ் ஸர்கானீ தொகுதி 2 பக்கம் 404 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இதனைக் குறிப்பிட்டவாறு கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கைகளில் தமது வாளை ஏந்திக் கொண்டு இந்த வாளிக்குரிய உரிமையை வழங்குபவர் யார்? என்று கேட்டார்கள். ஏராளமான சஹாபிகள் அதன் பெருமிதத்தின் ஆசையால் தனது கரங்களை நீட்டினார்கள். அதில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களும், இன்னும் கூறப்போனால் சில அறிவிப்புகளின் அடிப்படையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் அடங்குவார்கள். ஆனால் அன்னார் (ஸல்) அவர்கள் தமது கரத்தை தடுத்து நிறுத்தி இருந்தார்கள். யாருக்கும் கொடுக்கவில்லை. மாறாக, இதற்குரிய உரிமையை நிறைவேற்றுபவர் யாரும் இருக்கின்றாரா? என்றே கூறிக் கொண்டிருந்தார்கள். இறுதியில் ஹஸ்ரத் அபூதுஜானா அன்ஸாரி (ரலி) அவர்கள் தனது கரத்தை முன்னால் நீட்டினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு வழங்குங்கள் என்று கூறினார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் அந்த வாளை அவருக்கு வழங்கி விட்டார்கள்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 489)

உஹது போரில் நிராகரிப்பாளர்கள் திரும்பி வந்து தாக்குதல் தொடுத்தார்கள். அதனால் முஸ்லிம்களுக்கு பின்னடைவை சந்திக்க நேரிட்டது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்று அன்னார் (ஸல்) அவர்களைக் குறித்தும் செய்தி பரவியது.

இப்னு இஸ்ஹாக் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஷஹாதத்திற்கான அறிவிப்பு மற்றும் சில மக்கள் சிதறுண்டு போன பிறகு முதன் முதலில் ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் (ரலி) அவர்களின் பார்வை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது பட்டது. அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒளிமிக்க கண்களை நான் தலை கவசங்களுக்கு மத்தியில் பார்த்தபோது உரத்த குரலில் கூறினேன்: முஸ்லிம்களே! மகிழ்ச்சியடையுங்கள். இதோ இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இருக்கின்றார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமைதியாக இருக்கும்படி கையால் சைகை செய்தார்கள். முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அடையாளம் கண்டு கொண்டபோது அன்னார் (ஸல்) அவர்கள், பள்ளத்தாக்கின் பக்கம் அவர்களுடன் சென்றார்கள். அன்னார் (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் (ரலி), ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் சிம்மா (ரலி) போன்ற சஹாபா பெருமக்கள் இருந்தனர்.

(தாரீக் திப்ரி தொகுதி 3 பக்கம் 70 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது நாளன்று தனது நபித்தோழர்களின் ஒரு கூட்டத்தினரிடம் மரணத்திற்கான பைஅத்தை வாங்கினார்கள். வெளிப்படையில் முஸ்லிம்களுக்கு தோல்வி ஏற்பட்டிருந்தபோது அவர்கள் உறுதிப்பாட்டுடன் இருந்தனர். மேலும் தமது உயிருடன் விளையாடி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாக்க தொடங்கினர். எந்த அளவுக்கென்றால் அவர்களில் சிலர் ஷஹீதாகி விட்டனர். அந்த பைஅத் செய்வதற்கு நற்பேறு பெற்ற மக்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி), ஹஸ்ரத் சஅத் (ரலி), ஹஸ்ரத் ஸஹல் பின் ஹுனைஃப் (ரலி), ஹஸ்ரத் அபூதுஜானா (ரலி) ஆகியோரும் அடங்குவர்.

(அல் அஸாபா தொகுதி 3 பக்கம் 431 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உஹது போர் நிலவரத்தை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் மேலும் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சுற்றியிருந்த சஹாபிகள் தங்களது உயிரை அர்ப்பணிக்க தயாராக இருந்தார்கள். அவர்களுக்கு நிகரான உதாரணத்தை வரலாற்றில் கிடைப்பதில்லை. அந்த மக்கள் விட்டில் பூச்சிகளைப் போன்று அன்னார் (ஸல்) அவர்களை சுற்றி வட்டமடித்து வந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்களுக்காக தமது உயிருடன் விளையாடிக் கொண்டும் இருந்தனர். அனைத்து தாக்குதல்களையும் சஹாபிகள் தங்கள் மீது வாங்கிக் கொண்டனர். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாத்துக் கொண்டிருந்தனர். அத்துடன் எதிரிகள் மீதும் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) ஆகியோர் எண்ணற்ற முறை எதிரி மீது தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தனர். அவர்களின் வரிசைகளை சிதறடித்து விட்டார்கள். ஹஸ்ரத் அபூ தல்ஹா அன்ஸாரி (ரலி) அவர்கள் அம்புகளை எய்து எய்து எதிரிகளின் மூன்று வில்களை உடைத்து விட்டார்கள். மேலும் எதிரிகளின் அம்புகளுக்கெதிரில் தமது நெஞ்சில் அம்புகளை வாங்கியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உடலை தனது கேடயத்தால் காத்தார்கள்.

ஹஸ்ரத் சஅத் பின் வக்காஸ் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே அம்புகளை எடுத்துக் கொடுத்து வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அந்த அம்புகளை எதிரிகள் மீது எண்ணற்ற முறை எய்து கொண்டிருந்தார்கள். ஒரு முறை அன்னார் (ஸல்) அவர்கள் சஅத் (ரலி) அவர்களிடம் உம் மீது எனது தாயும், தந்தையும் அர்ப்பணம். தொடர்ந்து அம்பு எய்து கொண்டே செல்வீராக என்று கூறினார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் தமது இறுதி மூச்சு வரை மிகவும் பெருமிதத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த சொற்களை எடுத்துரைத்து வந்தார்கள்.

ஹஸ்ரத் அபூதுஜானா (ரலி) அவர்கள் மிக நீண்ட நேரம் வரை தமது உடலால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உடலை மறைத்து வந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்களை நோக்கி வந்த கல் அல்லது அம்புகளை அன்னார் (ரலி) தனது உடலின் மீது வாங்கிக் கொண்டார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னாரின் உடல் அம்புகளால் துளைக்கப்பட்டு விட்டது. ஆயினும் அன்னார் ஆ என்று கூட கூறவில்லை. மாறாக, தனது உடலில் அசைவு ஏற்படுவதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உடலின் ஒரு பகுதி எதிரிகளுக்கு இலக்காகி விடக் கூடாது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மீது எந்தவொரு அம்பும் பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவ்வாறு செய்தார்கள்.

ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாப்பதற்காக பல தாக்குதல்களை தமது உடலில் வாங்கிக் கொண்டார்கள். மேலும் அந்த முயற்சியில் அன்னாரின் கரம் செயலிழந்து நிரந்தரமாகவே வீணாகி விட்டது. ஆனால் இந்த சில எண்ணிக்கையிலான உயிரை அர்ப்பணிக்கும் சஹாபிகள் அந்த மாபெரும் வெள்ளத்திற்கு முன்னால் எதுவரை நிலைத்திருக்க முடியும்? அது எப்போதும் போல பெரும் அலைகளைப் போன்று நாலாப் புறமும் பரவி விட்டது. எதிரியின் ஒவ்வொரு தாக்குதலின் ஒவ்வொரு அலையும் முஸ்லிம்களை எப்படியாவது அசைத்து விடும். ஆனால் சிறிது இடைவெளி ஏற்பட்ட உடன் முஸ்லிம்கள் தங்களை தற்காத்துக் கொண்டு போரிட்டு வந்தார்கள். பின்னர் தமது அன்பிற்குரிய எஜமானரை சுற்றி ஒன்றுகூடி விட்டார்கள். சில முறை சில நேரங்கள் எவ்வளவு அபாயகரமான தாக்குதலாக இருந்ததென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளிப்படையில் தன்னந்தனியாக இருந்து விட்டார்கள். எனவே அப்படியொரு நேரம் வந்தது. அப்போது அன்னார் (ஸல்) அவர்களைச் சுற்றி வெறும் 12 நபர்களே இருந்தனர். ஒரு நேரம் எப்படிப்பட்டதாக இருந்ததென்றால், அப்போது அன்னார் (ஸல்) அவர்களுடன் வெறும் 2 நபர்களே இருந்தனர். அந்த உயிரை அர்ப்பணிப்பவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி), ஹஸ்ரத் சஅத் பின் வக்காஸ் (ரலி), ஹஸ்ரத் அபூதுஜானா (ரலி), ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அன்ஸாரி ஆகியோரின் பெயர்கள் சிறப்பாக இடம் பெற்றுள்ளன.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 495, 496)

உஹது போரின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய பற்கள் ஷஹீதாகின. எனவே அப்போது இருந்த நிலையை குறித்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வரைந்த சித்திரம் தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உஹது போர் நாளை குறிப்பிட்டவாறு அந்த நாள் முழுக்க முழுக்க ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களின் நாளாக இருந்தது என்று கூறினார்கள். பின்னர் அதன் விளக்கத்தையும் எடுத்துரைத்தார்கள். மேலும் அன்னார் (ரலி) இவ்வாறு கூறினார்கள்: நான் உஹது நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி திரும்பி வந்த நபர்களை சார்ந்தவனாக இருந்தேன். அப்போது ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாத்தவாறு போரிட்டுக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: எனது எண்ணம் இவ்வாறாகும். அதாவது அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாத்துக் கொண்டிருந்தார் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், நான் தல்ஹாவாக இருந்திருக்க வேண்டுமே! என்று நான் கூறினேன். என்னிடமிருந்து அந்த சந்தர்ப்பம் கைநழுவி விட்டது. மேலும் நான் எனது உள்ளத்தில் இவ்வாறு கூறினேன்: எனது சமுதாயத்தில் எனக்கு மிகவும் பிடித்த மனிதர் இவராவார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த நேரத்தில் இவ்வாறு சிந்தித்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: எனக்கும், இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கும் மத்தியில் ஒரு நபர் இருந்தார். அவரை என்னால் அடையாளம் காண முடியவில்லை. ஆயினும் நான் அந்த நபரைக் காட்டிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக இருந்தேன். மேலும் அவர் எந்த அளவிற்கு வேகமாக சென்று கொண்டிருந்தார் என்றால் என்னால் அந்த அளவிற்கு வேகமாக செல்ல முடியாது. அப்போது நான் பார்த்தபோது அவர் அபூ உபைதா பின் ஜராஹ் ஆக இருந்தார். பின்னர் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வந்தடைந்தேன். அன்னாரின் இரண்டு முன் பற்களும், நடுப்பற்களும் உடைந்திருந்தன. முகமும் காயமடைந்திருந்தது. அன்னார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய கன்னங்களில் போர்க் கவசங்களின் இரும்பு ஆணிகள் துளைத்திருந்தன. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் இருவரும் உங்களது தோழருக்கு உதவி செய்யுங்கள் என்று கூறினார்கள். உங்களது தோழர் என்பதன் பொருள் தல்ஹா என்பதாக இருந்தது.

அன்னாருக்கு அதிகமாக இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. என்னைக் கவனித்துக் கொள்ளுங்கள் என்று கூறுவதற்கு பகரமாக தல்ஹாவை சென்று பாருங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நாங்கள் அவரை விட்டு விடவில்லை. மேலும் நான் முன்னோக்கி சென்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய கன்னங்களிலிருந்த கவசத்தின் இரும்பு ஆணிகளை வெளியேற்ற முயற்சி செய்தேன். அப்போது ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள். நான் எனது உரிமையின் மீது சத்தியம் செய்து கூறுகின்றேன். தாங்கள் இதனை எனக்காக விட்டு விடுங்கள். எனவே நான் அதனை அவருக்காக விட்டு விட்டேன். அந்த இரும்பு ஆணிகளை கைகளால் பிடித்து இழுப்பதை அபூஉபைதா அவர்கள் விரும்பவில்லை. அதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வேதனை ஏற்படும் என்று எண்ணினார்கள். எனவே அன்னார் அந்த இரும்பு ஆணிகளை தமது வாயால் கடித்து வெளியே எடுக்க முயற்சி செய்தார்கள். ஒரு ஆணி வெளிவந்து விட்டது. மேலும் அந்த இரும்பு ஆணிகளுடன் அன்னாரின் முன் பல்லும் உடைந்து விட்டது. பின்னர் இரண்டாவது இரும்பு ஆணியை வெளியேற்றுவதற்காக நான் முன்னே சென்றேன். அவர்கள் செய்ததைப் போன்று நானும் செய்வேன் என்று முன்னேறினேன்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் கூறினேன்: நானும் இதேபோன்று இரண்டாவது இரும்பு ஆணியை வெளியேற்ற முயற்சி செய்கிறேன் என்று கூறினேன். அப்போது ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் மீண்டும் இவ்வாறு கூறினார்கள்: நான் எனது உரிமையின் மீது சத்தியம் செய்து கூறுகின்றேன். தாங்கள் இதனை எனக்காக விட்டு விடுங்கள். அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். எனவே மீண்டும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பின் வாங்கிக் கொண்டார்கள். எனவே அன்னார் மீண்டும் முன்னர் செய்ததுபோன்றே செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூஉபைதாவின் முன்னாலிருந்த இரண்டாவது பல்லும் இரும்பு ஆணியுடன் சேர்ந்து உடைந்து விட்டது. எனவே ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் உடைந்த முன் பற்களைக் கொண்ட மக்களில் மிகவும் அழகிய நபராக இருந்தார்கள். பின்னர் நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிகிச்சைப் பெற்று நலமுடன் திரும்பிய பிறகு ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களிடம் சென்றோம். அன்னார் ஒரு கிடங்கில் இருந்தார்கள். அன்னாரின் உடலில் ஈட்டி, வாள், அம்புகளின் ஏறக்குறைய 70 காயங்கள் இருந்தன. அன்னாரின் விரலும் உடைந்திருந்தது. எனவே நாங்கள் அதற்கு கட்டுப் போட்டு விட்டோம்.

(சபலுல் ஹுதா தொகுதி 4 பக்கம் 199, 200 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) மட்டுமின்றி ஹஸ்ரத் உக்பா பின் வஹப் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோரைக் குறித்தும் அறிவிப்பில் இவ்வாறு கிடைக்கின்றது. அதாவது அந்த இரும்பு ஆணிகளை அவர்களும் வெளியேற்றினார்கள்.

(ஷரஹ் ஸர்கானீ தொகுதி 2 பக்கம் 425 கஸ்வா உஹது – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் முந்தைய அறிவிப்புகள் சரியானதாக உள்ளன.

உஹது போர் நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களுடன் மலை மீது ஏறிக் கொண்டார்கள். அப்போது நிராகரிப்பாளர்களும் அன்னார் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் வந்தார்கள். சஹீஹ் புகாரியில் இதற்கான அறிவிப்பு கிடைக்கின்றது. அபூசுஃப்யான் மூன்று முறை கூவி அழைத்தார். அந்த மக்களில் முஹம்மது (ஸல்) இருக்கின்றாரா? என்று கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபிகளை அவருக்கு பதில் கொடுப்பதிலிருந்து தடுத்து விட்டார்கள். பின்னர் அவர் மூன்று முறை விழித்துக் கேட்டார். உங்களில் அபூகுஹாஃபாவின் மகன் இருக்கின்றாரா? அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இருக்கின்றாரா? என்று கேட்டார். மேலும் அந்த மக்களில் இப்னு கத்தாப் அதாவது உமர் இருக்கின்றாரா? என்று கேட்டார். பின்னர் அவர் தமது தோழர்களை நோக்கி திரும்பிச் சென்று அந்த மக்கள் கொல்லப்பட்டு விட்டனர் என்று கூறினார். இதைக்கேட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் தம்மை கட்டுப்பாட்டில் வைக்க முடியவில்லை. அன்னார் கூறினார்கள்: அல்லாஹ்வின் எதிரியே! இறைவன் மீது ஆணையாக! நீர் பொய் பேசியுள்ளீர். நீர் யாருடைய பெயரையெல்லாம் கூறினீரோ அவர்கள் அனைவரும் நலமுடன் உள்ளனர். உயிருடன் உள்ளனர். விரும்பத்தகாத விஷயங்களில் இன்னும் ஏராளமானவைகள் எஞ்சியுள்ளன.

(சஹீஹ் புகாரி, கிதாபு ஜிஹாத் ஹதீஸ் எண் 3039)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காயமுற்று மயக்கமுற்ற மற்றும் அதன் பிறகு நடந்த சம்பவங்களைக் குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: சிறிது நேரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சுய நினைவு வந்து விட்டது. சஹாபிகள் நாலா புறமும் மைதானத்திற்கு நபர்களை அனுப்பி வைத்தனர். முஸ்லிம்கள் மீண்டும் ஒன்றுசேர வேண்டும் என்று கூறினார்கள். தப்பியோடிய படையும் மீண்டும் ஒன்றுகூடத் தொடங்கியது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை அழைத்துக் கொண்டு மலையின் அடிவாரத்திற்கு சென்று விட்டார்கள். கோஹ் மலையின் அடிவாரத்தில் எஞ்சிய படை நின்று கொண்டிருந்தது. அப்போது அபூசுஃப்யான் மிகவும் சப்தமாக குரல் கொடுத்தார். மேலும் நாங்கள் முஹம்மது (ஸல்) அவர்களைக் கொன்று விட்டோம் என்று கூறினார். எதிரிகள் உண்மை நிலையை அறிந்து கொண்டு தாக்குதல் நடத்தி விடக் கூடாது. மேலும் காயமடைந்த முஸ்லிம்கள் மீண்டும் எதிரிகளின் தாக்குதலுக்கு இரையாகி விடக் கூடாது என்பதால் அபூசுஃப்யானின் கூற்றிற்கு எந்த பதிலும் வழங்கவில்லை. இஸ்லாமிய படை இந்த கூற்றுக்கு எந்த பதிலும் கொடுக்காததால் தனது எண்ணம் மிகச் சரியானது என்பது அபூசுஃப்யானிற்கு உறுதியாகி விட்டது. மேலும் நாம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களையும் கொன்று விட்டோம் என்று அவர் உரத்த குரலில் கூறிக் கொண்டிருந்தார். எந்த பதிலும் கொடுக்க வேண்டாம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் கட்டளையிட்டிருந்தார்கள்.

பின்னர் அபூசுஃப்யான் நாங்கள் உமரைக் கொன்று விட்டோம் என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் உணர்வுமிக்க நபராக இருந்தார்கள். அன்னார் அதற்கு பதிலாக நாங்கள் அல்லாஹ்வின் அருளால் உயிருடன் இருக்கின்றோம். மேலும் உம்மை எதிர்ப்பதற்காக தயாராக உள்ளோம் என்று அவருக்கு பதில் கொடுக்க விரும்பினார்கள். ஆனால் முஸ்லிம்களை துன்பத்தில் ஆழ்த்தாதீர்கள். மேலும் மௌனமாக இருங்கள் என்று கூறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை தடுத்து விட்டார்கள்.

தற்போது நாம் இஸ்லாத்தின் தோற்றுநரையும், அவரது இரண்டு கைகளையும் உடைத்து விட்டோம் என்ற நம்பிக்கை நிராகரிப்பாளர்களுக்கு ஏற்பட்டிருந்தது. அப்போது அபூசுஃப்யானும் அவரது தோழர்களும் மகிழ்ச்சியுடன் முழக்கமிட்டனர்.

اُعْلُ هُبَل - اُعْلُ هُبَل

எங்களது கண்ணியத்திற்குரிய ஹுபுல் சிலையின் கண்ணியம் உயரட்டும். அது இன்று இஸ்லாத்தை அழித்து விட்டது என்று கூறினார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: தான் மரணித்து விட்டதாக அறிவித்தபோதும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணித்து விட்டதாக அறிவித்தபோதும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மரணித்து விட்டதாக அறிவித்தபோதும் மௌனம் காக்கும்படி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தி வந்தார்கள். நிராகரிப்பாளர்களின் படை திரும்பி வந்து காயமடைந்த முஸ்லிம்கள் மீது தாக்குதல்

தொடுத்து விடக் கூடாது என்பதற்காகவும், எதிரிகளின் கரங்களால் முஸ்லிம்கள் ஷஹீதாகி விடக் கூடாது என்பதற்காகவும் மௌனமாக இருக்கும்படி அன்னார் (ஸல்) அவர்கள் அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் தற்போது அதே முஹம்மது (ஸல்) அவர்களின் ஆன்மா ஏக இறைவனின் கண்ணியத்திற்கான கேள்வி எழுந்தபோதும், ஷிர்க்கின் (வெற்றி) முழக்கம் மைதானத்தில் முழங்கப்பட்டபோதும் நிம்மதியிழந்தது. மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் மிகவும் உணர்வுடன் நீங்கள் ஏன் பதில் கொடுப்பதில்லை என்று சஹாபிகளை பார்த்தவாறு கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் என்ன கூற வேண்டும்? என்று நபித்தோழர்கள் கேட்டார்கள். அதற்கு اَللّٰهُ اَعْلٰى وَاَجَل - اَللّٰهُ اَعْلٰى وَاَجَل என்று கூறுங்கள். ஹுபுல் சிலையின் கண்ணியம் உயர்ந்து விட்டதாக நீங்கள் கூறுகின்றீர்கள். இது உங்களின் பொய்யாகும். இணையற்ற ஏகனாகிய அல்லாஹ்வே கண்ணியத்திற்குரியவன். அவனது கண்ணியம் உயர்ந்ததாகும்.

இவ்வாறு அன்னார் (ஸல்) அவர்கள் தான் உயிருடன் இருக்கின்ற செய்தி எதிரிகள் வரை எட்டச் செய்தார்கள்.

இந்த வீரமிக்க, தீரமிக்க பதிலின் தாக்கம் நிராகரிப்பாளர்களின் படையின் மீது எந்த அளவிற்கு ஆழமாக ஏற்பட்டதென்றால் அவர்களின் நம்பிக்கை இந்த பதிலால் மண்ணோடு மண்ணாகி விட்டது. அவர்களுக்கு முன்னால் உள்ளங்கை அளவில் காயமடைந்த முஸ்லிம்கள் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து அவர்களை கொன்று விடுவது பௌதீக சட்டத்திற்கேற்ப முற்றிலும் சாத்தியமானதாக இருந்தபோதிலும் அவர்கள் மீண்டும் தாக்குதல் நடத்துவதற்கு துணியவில்லை. அவர்களுக்கு எந்த அளவிற்கு வெற்றி கிடைத்திருந்ததோ அதை மகிழ்ச்சியுடன் கொண்டாடியவாறு மக்காவிற்கு திரும்பிச் சென்று விட்டார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20 பக்கம் 252, 253)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

اَلَّذِيْنَ اسْتَجَابُوْا لِلّٰهِ وَالرَّسُوْلِ مِنْۢ بَعْدِ مَآ اَصَابَهُمُ الْقَرْحُ ۛ
لِلَّذِيْنَ اَحْسَنُوْا مِنْهُمْ وَاتَّقَوْا اَجْرٌ عَظِيْمٌ ﴿١٧٣﴾

இந்த வசனம் சஹாபிகளைப் பற்றியதாகும்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த வசனம் சஹாபிகளைப் பற்றியதாகும். அதாவது எந்த மக்கள் தங்களுக்கு காயம் ஏற்பட்ட பிறகும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கூற்றை ஏற்றுக் கொண்டார்களோ, நன்மை செய்தார்களோ, இறையச்சத்தை மேற்கொண்டார்களோ அவர்களுக்கு மாபெரும் வெகுமதி உள்ளது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் உர்வாவிடம் கூறினார்கள்: எனது அண்ணன் மகனே! உமது முன்னோர்களும், சுபைர் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அந்த மக்களைச் சார்ந்தவராக இருந்தார்கள். அதாவது உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காயமடைந்திருந்தார்கள். இணை வைப்பவர்கள் திரும்பிச் சென்று விட்டனர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மீண்டும் எதிரிகள் திரும்பி வந்து விடக் கூடாது என்ற அச்சம் ஏற்பட்டது.

எதிரிகளை பின்தொடர்ந்து யார் செல்வார்? என்று அன்னார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அப்போது அவர்களில் 70 நபர்கள் தங்களது பெயரை கொடுத்தனர். அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களும் அடங்குவர் என்று உர்வா கூறி வந்தார்கள்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 4077)

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இது ஒரு விநோதமான விஷயமாகும். அதாவது குரைஷிகளுக்கு அந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக வெற்றி கிடைத்திருந்தது. வெளிப்படையான காரணிகளின் அடிப்படையில் அவர்கள் விரும்பியிருந்தால் தமது அந்த வெற்றியிலிருந்து அவர்கள் பயன் பெற்றிருக்க முடியும். மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கான வழிப்பாதை அவர்களுக்கு மிகவும் எளிமையாக திறந்திருந்தது. ஆயினும் இறை வல்லமையின் ஆதிக்கம் எப்படி இருந்ததென்றால் குரைஷிகளின் உள்ளங்கள் அந்த வெற்றிக்குப் பிறகும் உள்ளுக்குள்ளேயே அச்சமடைந்திருந்தது. மேலும் அவர்கள் அந்த வெற்றியை பெரிதாக நினைத்துக் கொண்டு உஹது மைதானத்தில் அவர்களுக்கு கிடைத்த வெற்றியை மக்காவிற்கு மிக விரைவாக திரும்பிச் செல்வதை உகந்ததாக கருதினார்கள். அவ்வாறிருந்தபோதிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூடுதல் எச்சரிக்கை உணர்வுடன் உடனடியாக 70 சஹாபிகள் கொண்ட ஒரு கூட்டத்தை ஆயத்தப்படுத்தி குரைஷிய படைகளை பின்தொடர்ந்து செல்வதற்கு அனுப்பி வைத்தார்கள். அந்தப் படையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். இது புகாரியின் அறிவிப்பாகும்.

பொதுவான வரலாற்றாசிரியர்கள் இவ்வாறு கூறுகின்றனர்: அதாவது அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அல்லது சில அறிவிப்புகளுக்கேற்ப ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களை எதிரிகளுக்குப் பின்னால் அனுப்பி வைத்தார்கள். மேலும் குரைஷிய படைகள் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு எண்ணம் கொண்டுள்ளார்களா? என்பதை அறிந்து வரும்படி கூறினார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் அன்னாரிடம் கூறினார்கள்.

குரைஷியர்கள் ஒட்டகங்களில் சவாரி செய்து கொண்டு குதிரைகளை வெறுமையாக ஓட்டிக் கொண்டு செல்கின்றார்கள் என்றால் அவர்கள் மக்காவை நோக்கி திரும்பிச் செல்கின்றார்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். மேலும் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு அவர்களுக்கு எண்ணம் இல்லை என்று பொருள். ஒருவேளை குதிரைகள் மீது அவர்கள் சவாரி செய்கின்றார்கள் என்றால் அவர்களின் எண்ணம் நல்லதல்ல என்று புரிந்து கொள்ளுங்கள். மேலும் ஒருவேளை குரைஷிய படை மதீனாவை நோக்கி திரும்புகின்றதென்றால் பின்னர் உடனடியாக தமக்கு தகவல் தரும்படி அன்னார் (ஸல்) அவர்கள் அவர்களிடம் வலியுறுத்திக் கூறியிருந்தார்கள். மேலும் ஒருவேளை குரைஷிகள் தற்போது மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்தார்கள் என்றால் பின்னர் இறைவன் மீது ஆணையாக! நாம் அவர்களை எதிர்த்து போரிட்டு அவர்களின் தாக்குதலுக்குரிய தண்டனையை அவர்களை சுவைக்கச் செய்து விடுவோம் என்று அன்னார் (ஸல்) அவர்கள் மிக உணர்வுப்பூர்வமான நிலையில் கூறினார்கள். எவ்வாறிருப்பினும் அங்கு சென்ற அந்தக் குழு குரைஷிகளின் படை மக்காவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்ற செய்தியை எடுத்துக் கொண்டு விரைவாக திரும்பி வந்து விட்டது.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 499, 500)

இந்த நற்குறிப்பு எதிர்வரும் நாட்களில் இன்னும் நடைபெறும். இன்ஷா அல்லாஹ்.

(தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

**பள்ளிவாசல் கட்டுமானமும் – வங்கி வட்டிப் பணமும்**

வங்கிகளிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையை இஸ்லாத்தை பரப்புகின்ற வகைக்கு செலவிடுவதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அனுமதி நல்கியுள்ளார்கள். இஸ்லாத்தின் ஏழ்மை நிலையில் மட்டும் தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தை பரப்புகின்ற வகையில் புத்தகங்கள் போன்றவற்றிற்காக அதனை செலவிட அனுமதியுள்ளது. பள்ளிவாசல்கள் கட்டுமானப் பணிகளுக்கு (வட்டிப் பணத்தை பயன்படுத்த) அனுமதி வழங்கவில்லை. (ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்)

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் டிசம்பர் 25, 2021)

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

**தொலைபேசி எண்: *1800 103 2131***

இந்த **TOLL FREE** எண்ணில் ∴போன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

*மல்ஃபூஸாத் (முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

தோன்றி, உண்மைக்கு சாட்சியம் வழங்கி பொய்யர்களின் வாயை அடைக்காமல் இருந்திருந்தால், வெட்கமே இல்லாமல் நமது நபி (ஸல்) அவர்கள் மீது பழிசுமத்துவதும், மக்களை வழிகெடுப்பதும் நிராகரிப்பாளர்களக்கு ஆகுமானதாக அமைந்திருக்கும்.

எனவே நினைவிற் கொள்ளுங்கள். நிச்சயமாக அவர்கள் பெரும் விசாரணையின் கீழ் உள்ளனர். என்னென்ன அறிவும் ஆற்றலும் உங்களுக்கு உள்ளதோ அதனை இந்த வழியில் செலவிடுங்கள். மேலும் மக்களை இந்த துன்பத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். இது அவசியமாகும். நீங்கள் தஜ்ஜாலைக் கொல்லவில்லையென்றாலும் கூட அவன் மரணித்தே தீருவான் என்று ஹதீஸிலிருந்து நிரூபணமாகின்றது. 13 ஆம் நூற்றாண்டிலிருந்து இந்த பேரழிவுகள் தொடங்கி இருந்தன. தற்போது அதற்கு முடிவு கட்டப்பட வேண்டிய நேரம் நெருங்கி விட்டது. ஒவ்வொருவரும் தம்மால் முடிந்த அளவுக்கு முயற்சி செய்வதும், ஒளியை மக்களுக்கு காட்டிக் கொடுப்பதும் அனைவரின் கடமையாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 355 – 357 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

......☆......☆......☆......

*முதல் பக்கத்தின் தொடர்ச்சி...*
*ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கூற்று...*

கொடிகளும் விண்ணின் தண்ணீரால் வளர்கின்றன. அந்த தண்ணீர் மனிதன் பருகுவதற்கும் பயன்படுகின்றது. பின்னர் அதே தண்ணீரால் செடி கொடிகள் வளர்கின்றன. அதிலிருந்தே மனிதனின் உணவும் உருவாகின்றது. இந்த அனைத்து விஷயங்களும் இரவு பகலாக சூரிய சந்திரன் மற்றும் நட்சத்திரங்களின் தாக்கங்களால் வளர்ந்து வருகின்றன. மற்றொரு பக்கம் அவை நிலைநிற்பதற்கு ஊடகமாக கடல் உள்ளது. அதில் தண்ணீருக்கான ஒரு பெரும் கருவூலம் இருக்கின்றது. அதிலிருந்து தண்ணீர் பெறப்பட்டு பின்னர் மனிதனுக்கே அந்த தண்ணீர் வழங்கப்படுகிறது. இந்த கடலில் உங்களது நிலையில் வைத்து ஆராய்வதற்கு மலைகள் உள்ளன. அவை தண்ணீரை ஒன்றுகூட்டுகின்றன. அங்கிருந்து நதிகள் மூலமாக தண்ணீர் ஓடுகின்றது. அந்த நதியானது சிறப்பான வழிப்பாதைகளில் ஓடி கடலில் சென்று கலந்து விடுகின்றது. இடைப்பட்ட பூமியில் அது பரவ முடியாது. ஏனென்றால் அந்நிலையில் பூமி மனிதனின் இருப்பிடத்திற்கு தகுதி வாய்ந்தவையாக இருக்க முடியாது.

இந்த அனைத்து விஷயங்களையும் வைத்து பார்க்கும்போது ஒரு தெளிவான முடிவு கிடைக்கின்றது. அது என்னவென்றால், உலகின் ஒவ்வொரு விஷயமும் மற்றொரு விஷயத்துடன் தொடர்புடையதாக இருக்கின்றது. மேலும் உலகம் ஏராளமான விஷயங்களின் தொகுப்பாக இருப்பதில்லை. இன்னும் கூறப்போனால், அதனுடைய முரண்பாடு ஒரே சங்கலியால் பிணைக்கப்பட்டதைப் போன்றதாகும். அதில் ஒரு கன்னி அறுந்து விட்டால் பின்னர் சங்கிலி சங்கிலியாக இருப்பதில்லை.

அதேபோன்று பிரபஞ்சத்திலிருந்து ஒரு விஷயத்தை வெளியேற்றி விட்டால் பின்னர் ஏனைய அனைத்து விஷயங்களும் அழிந்து விடும். கடலை வற்றச் செய்து விட்டால் தண்ணீர் முடிந்து விடும். நதியை வற்றச் செய்து விட்டால் கடல் வற்றி விடும். நதிகளுக்காக வழிகளை ஏற்படுத்துகின்ற பாதைகளை அகற்றி விட்டால் அனைத்துலகிலும் தண்ணீர் பரவி விடும். மேலும் பூமி வசிப்பதற்கு தகுதியானவையாக இருக்காது. மலை மற்றும் நிலத்தில் நிலநடுக்கங்கள் வந்து விடும். மனிதன் அழிந்து விடுவான். நதிகளுக்கென்று தண்ணீரின் கருவூலத்தில் பங்கு எஞ்சியிருக்கவில்லையென்றால் அனைத்து தண்ணீரும் உடனடியாக கடலில் சென்று கலந்து விடும்.

ஒருபக்கம் உலகில் வெள்ளம் தென்படும் என்றால் மற்றொரு பக்கம் ஆண்டு முழுவதும் தண்ணீர் வசதிக்கான ஏற்பாடு மறைந்து விடும். சந்திரனையும், நட்சத்திரத்தையும் அழித்து விட்டால் அவற்றின் காரணமாக உலகின் படைப்பில் ஏற்படக் கூடிய தாக்கம் அகன்று விடும். பூமி தனது அசல் நிலையில் எஞ்சியிருக்காது. சூரியனை விலக்கி விட்டால் மேகங்களுக்கான அந்த தொடர் அமைப்பு அகன்று விடும். மக்கள் தண்ணீருக்காக ஏங்கி தவித்து விடுவார்கள். காய்கறி விளைச்சல் நின்று விடும். மனித உடல் ஆரோக்கியம் சீர்கெட்டு விடும். அவனுக்கு புலால் உணவை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறும் எஞ்சியிருக்காது.

சுருக்கமாக, இந்த அனைத்து பிரபஞ்சமும் இணைந்து மனிதனுக்கு தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றது. அதன் ஒவ்வொரு பகுதியும் ஏனைய பகுதியை நிலைநாட்டுவதற்கு வழிமுறையாக உள்ளது. நிலைமை இவ்வாறிருக்கும்போது பின்னர் இரு தெய்வக் கொள்கை எவ்வாறு சரியாக இருக்க முடியும்? உலகை பல தெய்வங்கள் படைத்திருந்தால் பின்னர் ஒன்று மற்றொன்றிலிருந்து சுதந்திரமாக உள்ளது என்று கூறக் கூடிய பகுதி எந்தப் பகுதியாக இருக்கும்? மேலும் இதனை வேறொருவர் படைத்தார் என்று அதனை எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்? முழு உலகமும் ஒரே சங்கலியின் கன்னிகளால் பிணைக்கப்பட்டிருக்கும்போது அதனை உருவாக்கக் கூடியவன் ஒரே இறைவனாக உள்ளான் என்று ஒப்புக் கொள்ள நேரிடும். இறைவன் அனைத்து பிரபஞ்சத்தையும் உருவாக்குவதற்கு வல்லமை பெற்றிருக்கவில்லை என்று கூறினால் தவிர.

எனவே பல தெய்வங்கள் இணைந்து பணிகளை பங்கிட்டுக் கொண்டன என்று கூற நேரிடும். ஏற்கனவே வழங்கப்பட்ட வரைபடத்திற்கேற்ப ஒவ்வொருவரும் தத்தமது பங்கை முழுமை செய்தார்கள் என்று கூற நேரிடும். ஆனால் இந்தக் கொள்கை இணை வைப்பவர்களின் கொள்கை அல்ல. அவ்வாறு இருந்தாலும் அது பகுத்தறிவிற்கு எதிரானதாகும். ஏனென்றால் குறையுடைய இருப்பு இறைவனாக இருக்க முடியாது. எனவே இந்த சான்றிலிருந்து اِلٰهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ உங்களது வணக்கத்திற்குரியவன் ஏக இறைவனே ஆவான் என்ற முடிவே வெளிப்படுகின்றது.

முந்தைய வசனங்களில் கூறப்பட்டுள்ள மற்றொரு கருத்து என்னவென்றால், இறைவன் என்று அழைக்கப்படுகின்ற அனைத்து பொய் தெய்வங்களும் மரணித்து விட்டன என்பதாகும். எனவே அவர்கள் மரணித்து விட்டபோது பின்னர் ஏக இறைவனே எஞ்சியிருக்கின்றான். அவன் மரணத்திற்கு அப்பாற்பட்டவன் ஆவான்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 151 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

......☆......☆......☆......

*(12 வது பக்கத்தின் தொடர்ச்சி...)*
*நியூஸிலாந்து சுற்றுப்பயணம்*

அமர்ந்த பிறகு விடை பெற்றார்கள். 2:40 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹோட்டலுக்கு வருகை தந்தார்கள்.

**ஆக்லாந்திற்கு திரும்புதல்**

3:45 மணியளவில் ஹோட்டலிலிருந்து விமான நிலையத்திற்கு புறப்பட்டோம். அரை மணி நேர பயணத்திற்குப் பிறகு 4:15 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விலிங்டன் விமான நிலையத்திற்கு வருகை தந்தார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விமான நிலையத்திற்குள் சென்று விட்டார்கள். 4:25 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விமானத்தில் ஏறி அமர்ந்தார்கள். ஏர் நியூஸிலாந்தின் Nz458 என்ற விமானம் 4:50 மணிக்கு விலிங்டனிலிருந்து ஆக்லாந்திற்கு புறப்பட்டது. ஒரு மணி நேர பயணத்திற்குப் பிறகு 5:50 மணியளவில் விமானம் ஆக்லாந்தின் சர்வதேச விமான நிலையத்தில் தரை இறங்கியது.

நியூஸிலாந்து ஜமாஅத்தின் சதர் சாஹிப் அவர்களும், ஜமாஅத் முபல்லிக் சாஹிபும், நியூஸிலாந்து தேசிய குத்தாமுல் அஹ்மதிய்யா தலைவர் அவர்களும் இந்தப் பயணத்தில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் இருந்தார்கள். விமான நிலையத்தில் தேசிய செயற்குழுவின் சில உறுப்பினர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை வரவேற்றார்கள். விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு சுமார் 6:30 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடமான Quest ற்கு சென்றார்கள். 8:30 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பைத்துல் முகீத் பள்ளிவாசலுக்கு சென்று மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை ஜமு செய்து தொழ வைத்தார்கள். தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்று விட்டார்கள்.

(தொடரும்...)

(நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை – அல்பத்ர் உருது பத்திரிகை – பிப்ரவரி 27, 2014)

......☆......☆......☆......

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 24 February 2022 Issue No. 8

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நியூஸிலாந்து சுற்றுப் பயணம் 2013

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

### நியூஸிலாந்து பாராளுமன்றத்தில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் தொடர்ச்சி

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நீதியை நிலைநாட்டுவது தொடர்பாக இஸ்லாம் என்ன கூறுகின்றது? சூரா அல்மாயிதாவின் 9 வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்: நம்பிக்கை கொண்ட மக்களே! அல்லாஹ்வுக்காக வலிமையுடன் கண்காணித்தவாறு நீதிக்கு ஆதரவாக சாட்சி கூறுபவர்களாக நிலைத்திருங்கள். எந்தவொரு சமுதாயத்தின் மீதான பகைமையும் உங்களை ஒருபோதும் அநீதியிழைக்குமாறு தூண்ட வேண்டாம். நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இது இறையச்சத்திற்கு மிகவும் நெருக்கமானதாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் எப்போதும் நன்கு அறிந்து வருகின்றான்.

எனவே இந்த வசனத்தில் திருக்குர்ஆன் நீதியின் உயர்தரமான அந்தஸ்துகளை சுட்டிக் காட்டியுள்ளது. மிருகத்தனமான மற்றும் முட்டாள்தனமான செயல்களை செய்த பிறகும் தம்மை முஸ்லிம் என்று கூறிக் கொள்கின்ற மக்களுக்கு இந்த கட்டளை குறிப்பாக பொருந்தும். நீதி மற்றும் நேர்மையின் உயர்தரமான நிலையை திருக்குர்ஆன் எடுத்துக் கூறியுள்ளது.

திருக்குர்ஆன் நீதி மற்றும் நேர்மையின் உயர் தரத்தை எடுத்தக் கூறியுள்ளது. திருக்குர்ஆன் நீதியுடன் நடந்து கொள்ளும்படி மட்டும் கட்டளை வழங்கவில்லை. மாறாக, இந்த அளவிற்கு அதில் அழுத்தம் கொடுத்துள்ளது. திருக்குர்ஆன் கூறுகின்றது.

நம்பிக்கையாளர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ, உங்கள் பெற்றோருக்கோ, நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும் அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர்களாயிருங்கள். (யாருக்காக சாட்சி கூறப்பட்டதோ) அவர் செல்வராயினும் ஏழையாயினும் சரி. அல்லாஹ் அவ்விருவருக்கும் (உங்களை விட) அதிக அளவில் நன்மையை விரும்பக் கூடியவன் ஆவான். நீங்கள் நேர்மையுடன் செயல்படும் பொருட்டு, அற்ப ஆசைகளைப் பின்பற்றாதீர்கள். நீங்கள் (உண்மையை) மறைத்தாலோ, தட்டிக் கழித்தாலோ நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கு அறிகிறான் (என்பதை நினைவில் கொள்ளுங்கள்). (4:136)

இவை நீதியின் அடிப்படை அளவுகோலாகும். சமுதாயத்தின் அடிமட்டத்திலிருந்து உலகளாவிய மட்டம் வரை இவற்றால் அமைதியை நிலைநாட்ட முடியும். இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் இந்த போதனையின்படி அமல் செய்தார்கள். மேலும் இதே தூதுச் செய்தியை பின்னர் உலகில் பரப்பினார்கள் என்ற உண்மைக்கு வரலாறு சாட்சியாக உள்ளது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: தற்போது இந்த காலத்தில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநரும், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் உண்மைப்பேரன்பருமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் இந்த போதனையை பரப்பினார்கள். மேலும் அதனை பிரச்சாரம் செய்தார்கள். மேலும் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கும் அமைதியை பரப்பும்படி வழிகாட்டியுள்ளார்கள். அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் படைப்பினங்களுக்குரிய உரிமைகள் இரண்டையும் நிறைவேற்றுவதன் பக்கம் மனித இனத்திற்கு கவனமூட்ட வேண்டும் என்று அன்னார் (அலை) அவர்கள் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு வழிகாட்டியுள்ளார்கள்.

இதன் காரணமாகவே அஹ்மதிய்யா ஜமாஅத் அனைத்து மக்களையும் அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் படைப்பினங்களுக்குரிய உரிமைகள் ஆகியவற்றை முழுமை செய்வதற்கும், நீதியின் உயர்தரங்களை நிலைநாட்டுவதற்கும் ஏற்பட்டுள்ள அதிக தேவையைக் குறித்து வலியுறுத்துகின்றது.

இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

நம்மில் ஒவ்வொருவரும் மதம் மற்றும் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டு ஒருவர் மற்றவரின் உரிமைகளை செலுத்துவதன் பக்கம் கவனம் கொண்டவர்களாக ஆக வேண்டும் என்று நான் துஆ செய்கின்றேன். அப்போது தான் அமைதி மற்றும் ஒற்றுமையின் சொர்க்கமாக உலகம் மாற முடியும். இறுதியில் மற்றொரு முறை இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டதற்காகவும், எனது கூற்றுகளை கேட்டதற்காகவும் நான் நன்றி செலுத்திக் கொள்கின்றேன். அல்லாஹ் உங்கள் அனைவர் மீதும் அருள் செய்வானாக. உங்கள் அனைவருக்கும் மிகவும் நன்றி.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் இந்த சொற்பொழிவு 1:15 மணியளவில் நிறைவடைந்தது. ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சொற்பொழிவு நிறைவடைந்தவுடன் கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் அனைவரும் நீண்ட நேரம் வரை கைதட்டிக் கொண்டே இருந்தனர்.

இதன் பிறகு பாராளுமன்ற உறுப்பினர் Hon. Kanwaljit Sing Bakshi மேடைக்கு வந்து ஹுஸூர் அவர்களுக்கு நன்றி கூறினார். மற்றொரு பாராளுமன்ற உறுப்பினர் Hon Rajend Prasad அவரும் மேடைக்கு வந்தார். மேலும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு பாராளுமன்றத்திற்கு வருகை தந்ததற்காகவும், நியூஸிலாந்து வருகை தந்ததற்காகவும் எதிர்க்கட்சியின் சார்பாக அவர் நன்றி கூறினார். மேலும் நல்வரவை தெரிவித்துக் கொண்டார்.

அதன் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இன்றைய இந்த நிகழ்ச்சியை நடத்திய பாராளுமன்ற உறுப்பினர் Hon. Kanwaljit Bakshi அவர்களுக்கு மாவூரி மொழியாக்க திருக்குர்ஆனையும், மினாரத்துல் மஸீஹ் மாதிரியையும் அன்பளிப்பாக வழங்கினார்கள். அப்போது, திருக்குர்ஆன் மொழியாக்கம் பாராளுமன்ற நூலகத்தில் வைக்கப்படும் என்று அந்த பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.

இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் துஆ செய்தார்கள். அதன் பிறகு விருந்தினர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்யப்பட்டது. விருந்தின்போது கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்திப்பதற்கும் வாய்ப்பு பெற்றுக் கொண்டார்கள்.

அதன் பிறகு பாராளுமன்ற உறுப்பினர் Hon. Kanwaljit Bukhshi சாஹிப் ஹுஸூர் அவர்களுக்கு நியூஸிலாந்து பாராளுமன்றத்தை சுற்றிக் காட்டினார். நியூஸிலாந்தின் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 120 ஆகும். இதற்கு முன்பு பாராளுமன்றத்தில் மேலவை இருந்து வந்தது. ஆனால் தற்போது அரசாங்க அமைப்பில் பாராளுமன்றம் மட்டுமே உள்ளது. மேலவை இல்லை. மேலவை ஹால் கட்டடத்தில் லுஹர் மற்றும் அஸர் தொழுகை தொழுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாராளுமன்றத்தை சுற்றிப் பார்த்த பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் லுஹர் மற்றும் அஸர் தொழுகையை ஜமு செய்து தொழ வைத்தார்கள். இவ்வாறு இன்று அல்லாஹ்வின் அருளால் நியூஸிலாந்து பாராளுமன்ற அவையிலும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தொழ வைத்தார்கள். இதற்கு முன்பு பிரிட்டிஷ் பாராளுமன்றம் மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றத்திலும் ஹுஸூர் அவர்கள் தொழுகை நடத்தியுள்ளார்கள்.

இதன் பிறகு 2:25 மணிக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பாராளுமன்றத்திலிருந்து வெளியே வருகை தந்தார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை வழியனுப்பி வைப்பதற்காக வருகை தந்தார்கள். ஹுஸூர் அவர்கள் வாகனத்தில்

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad